# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 24-9-61 விலை சதம் 15 | இதழ் 15


## ஆசிரியைக்குத் தமிழ் தெரியாது; பிள்ளைகளுக்குச் சிங்களம் தெரியாது!

நிலாவெளியைச் சேர்ந்த இறக்கண்டி என்னுமிடத்தில், தமிழ் தெரியாத சிங்கள மொழிபோதனை ஆசிரியையின் நியமனத்தால், அங்குள்ள தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் குழந்தைகள். திக்கு முக்காடித் தவிக்கிறார்கள்!

ஆசிரியைக்குத் தமிழ் தெரியாது; பிள்ளைகளுக்கோ தமிழைத் தவிர வேறு எந்த மொழியுமே தெரியாது! இந்த நிலையில் சிங்கள மொழியைப் போதிக்கமுடியுமா என்று அவதானிகள் ஆச்சரியப் படுகிறார்கள்! ஏற்ற நடவடிக்கையை, இவ்வூர் வாசிகள் எடுத்துவருவதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் தலையிட்டிருக்கும் இறக்கண்டி கிராம முன்னேற்றச் சங்கம், அரசாங்கத்திடம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளதாம்!

### தோற்கடிக்கப்பட்ட அரசாங்கக்கட்சி

# ஆதரவாளர்களுக்குப் பெரிய பதவிகள்!

சி. டபிள்யூ ஈ. என்பது அரசாங்கப் பொறுப்பிலுள்ள ஒரு ஸ்தாபனமாகும். பல தரப்பட்ட வேலைகளையும் இந்த ஸ்தாபனம் செய்து வருகிறது. ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரம், கான்ராக்ட் போன்ற பல துறைகளில் இதன் வேலைகள் வியாபித்து நிற்கின்றன. பெருத்த படிப்பறிவும், பரந்த அனுபவமும், இயற்கையான திறமையும் மிக்கவர்கள் டைரக்டர்களாக இருந்தால் தான் இத்தகைய ஒரு பெரிய ஸ்தாபனம் சிறப்போடு செயல்பட முடியும்.

சுதந்திரக் கட்சி அரசாங்கம் இத்தகைய பெரிய ஸ்தாபனத்திற்கு டைரக்டர்களாக நியமித்திருப்பவர்களைப் பார்க்கும்போது பொது மக்களுக்கு ஆத்திரமும், சிரிப்பும் ஒரு சேர வருகின்றன.

அரசாங்கந் தான் 'மாமி—மருமகன்' அரசாங்கமாக இருக்கிறதென்றால், இலாகாக்களிலுங் கூட குடும்பத்தவர்களை நுழைக்கும் 'திருகுதாளம்' இப்போது ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளது.

சி. டபிள்யூ. ஈ. க்கு ஏழு டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் மூன்றுபேர் கடந்த தேர்தலின்போது சுதந்திரக் கட்சி அபேட்சகர்களாகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தவர்களாகும்!

சி. டபிள்யூ. ஈ. யில் நியமனம் பெற்றுள்ள 'செல்லக் குஞ்சு'களின் விபரங்களைப் பார்ப்போம்:-

- டைரக்டர்கள் தலைவர்: திரு ரத்ன தேசப்பிரிய சேன நாயக்கா (கடந்த தேர்தலில் டெடிகமைத் தொகுதியில் போட்டியிட்டுதோல்வி கண்டவர்).
- டைரக்டரும், கருவாட்டு வியாபார இலாகாத் தலைவரும்: திரு. டி. டபிள்யூ. ராஜபக்ச. (கடந்த தேர்தலில் ஹப்புத்தளைத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டவர்).
- டைரக்டர்: திரு. எச். எம். நவரத்ன (கடந்த தேர்தலில் மினிப்பே தொகுதியில் போட்டியிட்டுதோல்வி கண்டவர்)
- ஏற்றுமதி மானேஜர்: திரு. மன்னம்பேரி. (முன்னுளில் குமாஸ்தாவாக இருந்தவர். இப்போது டைரக்டர்கள் தலைவரோடு ஒரே வீட்டில் குடியிருப்பவர்).
- ஹாட்வெயர்இலாகா மானேஜர்: (திரு. ரி. பி. கருணதிலகா (மந்திரி கலுகல்லையின் மச்சான்).

இந்த நியமனங்கள் யாவும் பொது மக்கள் வரிப் பணத்தில் சுதந்திரக் கட்சியினர் நடத்தும் உல்லாச வாழ்வையே சுட்டிக் காட்டுகின்றன!

அறிவும், அனுபவமும் தேவையான பல பெரிய பதவிகளுக்கெல்லாம் சாதாரண பேர்வழிகளைச் சுதந்திரக் கட்சிஅரசாங்கம் நியமித்திருக்கிறது.

இத்தகைய சீர்கேடுகள் தான், அரசாங்கத்தின்தேசியமயக் கொள்கையைக் கண்டு பொதுமக்கள் திகிலுறும்படி செய்கின்றன.

## கல்வி அமைச்சுக்கு இவரே தகுந்தவர்!



''காலஞ்சென்ற திரு. ஹமர் ஷீல்டை நான் பல முறை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவரது மனைவியையும், குழந்தைகளையும் கூட நான் சந்தித்திருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்! — என்று கூறியிருக்கிறாரே நமது கல்வி மந்திரி ஜனுப். பதி யுதீன் மஹ்மூத்?"

''செத்துப்போன அந்தப் பிரமச்சாரி திரும்பி வந்து, இவர்மீது மானநஷ்ட வழக்குத் தொடரப் போகிறாரா?"

# அநாகரிகச் செயல்!

அரசாங்கக் கட்சியினரின் அற்பத்தனமான நடவடிக்கையைக் காண விரும்புபவர்கள் ஒரு தடவை கொழும்பு மியூசியத்திற்குச் சென்று வருவது நல்லது. சமீபகாலம் வரைக்கும் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் சவப்பெட்டியை மூடிச் செல்லப் பயன்பட்ட கொடி (Flag) ஒன்று கொழும்பு மியூசியத்தில் இருந்தது. இப்போது அந்தக்கொடி அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக திரு. பண்டாரநாயக்காவின் சவப்பெட்டியை மூடிச் செல்லப் பயன் படுத்தப்பட்ட கொடி அந்த இடத்தை அலங்கரிக்கின்றது!

பண்டாரநாயக்காவின் சவத்தை மூடிய கொடியை மியூசியத்தில் வைத்ததில் தவறு ஒன்றுமில்லை! ஆனால், சேனநாயக்காவின் சவத்தை மூடிய கொடியை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் பண்டாரநாயக்காவின் சவத்தை மூடிய கொடியை வைத்தது தான் தவறாகும்!



ஒட்டிப்பிறந்த 'இரட்டைக் குமரிகள்' என்று எண்ணி விடாதீர்கள்! இரட்டையரல்ல, இவர்கள். அருணாசலம் பிக்சர்ஸாரின் ''பொன்னித் திருநாள்'' படத்தில் ராஜசுலோசனாவும், விஜயலட்சுமியும் இப்படிக் கவர்ச்சித் தோற்றம் தருகிறார்கள்!

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**24-9-61 முதல் 30-9-61 வரை**

மேடம்: பந்துக்களும் சிநேகிதர்களும் மிகுந்த உதவியாக இருப்பார்கள். சத்துரு ஜயமும் கடன் தொல்லை நீக்கமும் உண்டு. ஆனல் தேகசுகம் நன்ருக இராது. பிதாவழிக் கவலையும் ஏற்படும்.

இடபம்: இளைய சகோதர சகோதரிகளால் விசேஷ நன்மையுண்டு. பூமியாலும் லாபம் ஏற்படும் ஆனல் வாகனுதிகளால் செலவு உண்டு தொழில் ஸ்தானத்திலும் சிறு சங்கடங்கள் ஏற்படும்.

மிதுனம்: குடும்ப விஷயத்தில் சில தொல்லைகள் ஏற்படலாம். மனதில் அமைதி நிலவாது. தேகசுகம் சிறிது பாதிக்கப்படும். வியாழக்கிழமை வரை அவதானமாகச் செலவிடவும் கடைசி இருதினங்களும் நன்மை பயக்கும்.

கடகம்: எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற்றமடைய இடமுண்டு. பொருள் விருத்தியும் உண்டு. முன் முதலீடு செய்தவற்ருல் லாபமேற்படும். சகோதர சகோதரிகளால் விசேஷ நன்மையுண்டு.

சிங்கம்: தேக சுகமும் குடும்ப சுகமும் குறைவாகவே இருக்கும். ஆனல் பொருள் விருத்தியுண்டு. பூமிப் பிரயோசன நலனும் சகோதர உதவியும் கிட்டும். வாரத்தின் முதலிரண்டு நாட்களையும் அவதானமாகச் செலவிடவும்.

கன்னி: நீங்கள் நினைத்தவண்ணம் கருமங்களை நடத்துவது கஷ்டமாக இருக்கும். மனதில் அமைதி நிலவாது. நண்பர்களிடையே மாருன விளக்கங்கள் ஏற்படலாம் ஆனல் பொருள் விருத்தியுண்டு, செவ்வாய், புதன், வியாழன் காலையை அவதானமாகக் கழிக்கவும்.

துலாம்: நண்பர்கள் சகாயமும் பொருள் விருத்தியும் உண்டு பூமியாலும் லாபமும் ஏற்படும். ஆனல் தேகசுகவீனம் காணப்படுகிறது. நேத்திரசுகக்குறைவு உண்டு. வியாழன், வெள்ளி, சனி காலையில் சங்கடங்கள் அதிகமாகலாம்.

விருச்சிகம்: எடுத்த விஷயங்களில் வெற்றியுண்டு போதிய வருவாயும் காணப்படுகிறது. ஆனல் வீண் அபவாதங்கள் ஏற்பட இடமுண்டு தேக சுகவீனமும் உண்டாகும். வாரஇறுதியை அவதானமாகக் கழிக்கவும்.

தனுசு: மனதில் அமைதி நிலவாது. பிதாவழி கஷ்டம் ஏற்படும். ஆனல் பொருள் விருத்தியுண்டு. கீர்த்தியும், அதிக பிரயாசமும் ஏற்படும்.

மகரம்: அதிக பிரயாசத்துடன் காரியசித்தியுண்டு. அந்நியர் மூலமாகச் சில உதவிகள் கிட்டும். ஆனல் மனதில் அமைதி நிலவாது. தேகசுகத்தைப் பேணவும்.

கும்பம்: முன்பு கிட்டாத சில விஷயங்கள் இப்போது கைகூடிவரும். பொருள் விருத்தியுண்டு. ஆனல் மனதில் ஆறுதலிருக்காது. தேசுகவீனமுமுண்டு.

மீனம்: சத்துரு ஜயம் உண்டு. குடும்பத்தில் சில சச்சரவுகள் ஏற்பட்டு நீங்கும். பொருள் விருத்தியுண்டு. ஆனல் பிரயாசமும் அதிகமாக இருக்கும்.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.




## அடுத்த முறை கதிரையுடன் கவிழ்ப்பார்?

# யாழ் மேயருக்கு எச்சரிக்கை!

கடந்த வாரம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கலகலப்பாக, கலாட்டாவுடன் ஆரம்பமாகியது!

மேயர் திரு. டி. எஸ். துரைராசா ஆசனத்தில் வந்து அமர்ந்ததுதான் தாமதம், கோட்டை வட்டார உறுப்பினர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர், "நான்முன்னறிவித்தல் செய்த பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன?" என்று ஆரம்பித்து, சரமாரியாகப் பேசித் தீர்த்து விட்டார்.

சபையில் ஒழுங்கை நிலைநாட்டு முகமாக மேயர் அவரை ஆசனத்தில் அமரும்படி கூறியும், மேயரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்த திரு இராஜசூரியரை அங்கிருந்து வெளியேற்றப் போலிசார் அழைக்கப்பட்டனர்.

### "போலிசார் வந்தால் வரட்டும்!"

"போலிஸ் என்ருல் எனக்கென்ன பயமா? பாராளுமன்றத்தில் பிலிப்பையும் வெளியேற்றப் போலிசார்தான் அழைக்கப்பட்டார்கள், அவர்களுக்குத் தைரியமிருந்தால் இங்கிருந்து என்னை வெளியேற்றட்டும் பார்ப்போம்!" என்று சவால் விட்டார் திரு இராஜசூரியர்.

அதைத் தொடர்ந்து திரு. இராஜசூரியரை சபையிலிருந்து ஒரு மாத காலத்திற்கு நீக்கி வைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இராஜசூரியர் அப்பொழுதும் அசையவில்லை. போலிசாரும் வந்தனர். திரு. இராசசூரியர் தந்திரமாக வெளியில் அழைத்துச் செல்லப்பட்டார். கூட்டம் ஆரம்பமாகியது. சபைக்குள் மீண்டும் பிரவேசித்த திரு. இராசசூரியர், முன்னர் சபையை மதிக்காததற்காக மன்னிப்புக் கேட்டார். சபையும் அதை ஏற்றுக்கொண்டது.

### "சேரியோ!"

அதன் பின்னரும் போலிஸார் சபைக்குள் அமர்ந்திருப்பதை ஆட்சேபித்த இராஜசூரியர், சபைக்கு 'சேரியோ' போட்டு விட்டு வெளியேறினர். போலிசார் சபையிலிருந்து வெளியேறியவுடன், மீண்டும் சபையில் வந்து அமர்ந்த அவர், விவாதங்களில் கலந்துகொண்டார். பின்னர் மேயருடன் அவர் பேசும் பொழுதெல்லாம் 'ஐயா' 'ஐயா' என்று மிகவும் மரியாதையுடன் பேசினர்.

### "கதிரையுடன் கவிழ்த்து விடுவேன்"

கூட்டம் முடிந்தவுடன், "என் விஷயம் என்ன"? என்று மீண்டும் பேச்சை ஆரம்த்தார் திரு. இராஜசூரியர். மேயர் அதையும் தட்டிக் கழித்துவிட்டு எழுந்து நடக்கவே, "இந்தமுறை இப்படி நடந்துவிட்டது. அடுத்தமுறையும் இப்படி நடந்தால் கதிரையுடன் கவிழ்த்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று சப்தம் போட்ட வண்ணமே சபை மண்டபத்தை விட்டு வெளியேறினர் இராஜசூரியர்.

# "மின்சார எஞ்சினியரை அனுசரித்து நடக்காவிட்டால் நகரம் இருளில் மூழ்கிவிடுமே!"

## யாழ் மேயர் சொன்னது.

"ஒரு பெண்ணும் ஆணும் ஒன்பது மாதங்கள் ஒன்ருகக் கூடி முயற்சித்தால் போதும், ஒரு அழகான குழந்தை கிடைத்துவிடும் என்று சொல்வார்கள். ஆனல், யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர்களாகிய நாமெல்லாம் கூடி, ஒன்பது மாதகாலத்திற்கும் மேலாக யாழ்ப்பாண நகரின் மின்சாரசப்ளையை அபிவிருத்தி செய்வதற்காக முயற்சியெடுத்துக்கொண்டுதான் இருக்கிருேம். ஆனல் இதுவரையில் ஒரு முடிவும் கிடைக்கவில்லை! ஒருவேளை நம் மாநகரசபையும் ஒரு மலட்டு மனைவியைப்போன்றதோ என்னவோ?" என்று, யாழ் நகரசபைக்கூட்டத்தின்போது, மின்சாரசப்ளையின் மோசமான நிலைமையைக் குறிப்பிட்டுப்பேசிய டாக்டர். தர்மலிங்கம் கூறினர்.

அதற்குப் பதிலளித்த மேயர், "இந்த விஷயத்தில் எஞ்சினியரின் ஒத்துழைப்பு அத்தியாவசியம். அவர் சொல்வதை அனுசரித்துத்தான் நாம் நடக்கவேண்டும். இல்லாவிட்டால் யாழ்ப்பாண நகரம் முழுவதுமே இருளில் மூழ்கிவிடவும் கூடும்!" என்று கூறினர்.

கடைசியில், இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட 'டிரான்ஸ்பாமர்' ஒன்றை வாங்கி, யாழ்ப்பாணத்தின் மின்சார சப்ளையை அதிகப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

### வந்ததடி ராஜ யோகம்!

ஸன்போர்ட் நகரத்தில் 'இமிடேஷன் மோதிரங்கள் விற்கும் கடை ஒன்றிருக்கிறது. அங்கே விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு மோதிரமும் ஐந்து அல்லது பத்துச் சதந்தான்.

வெஸ்மா ஜோன்ஸன் என்ற ஒரு யுவதி, ஒரு சமயம் அந்தக் கடையில் ஒரு மோதிரத்தை வாங்கிக் கொண்டு போனுள். வீட்டுக்குப்போய் அந்த மோதிரத்தைப் பரீட்சித்துப் பார்த்தபொழுது, உண்மையிலேயே ஒரு வைர மோதிரமாக இருந்ததாம் அது!

**சேலம்**

S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

**வீரிய விர்த்தி மாத்திரை**

மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமிதபோகத்தினுலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு. இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறத்த வீரிய மாத்திரை.

24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00

**லேபனம் மெழுகு**

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகிய வைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00


தேவைக்கு எழுதவும்:
கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலே பஜார், ஆன்க்கருனை.
(சிலோன்) (P. O.)

## பாராளுமன்ற உறுப்பினரின் தவருன சலுகைத் தந்திகள்.

# 4406.

### கட்டணத்தை அறவிட ஆலோசனை?

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஓரளவு கட்டுப்பாடுகளுடன் இலவசமாகத் தந்திகள் அனுப்புவதற்கான சலுகைகள் அளிக்கப்படுள்ளது. ஆனல், இந்தச் சலுகைக் கட்டுப்பாட்டை மீறி, அவர்கள் 4,406 தந்திகள் அனுப்பியுள்ளதாகப் போஸ்ட் மாஸ்டர் ஜெனறல் அறிவித்திருக்கிருர்! இந்தத் தந்திகளை ஆராய்ந்து, சலுகைக்குள் அடங்காத தந்திகளுக்கான கட்டணத்தை எப்படி அறவிடுவது என்பதை அறிவிக்கும் ஒரு புதிய கமிட்டி கூடிய சீக்கிரத்தில் நியமிக்கப் படவிருப்பதாகத் தெரிகிறது.




"தமிழ் காங்கிரஸ் கட்சிக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சி நடைபெறுகிறது!"
— பத்திரிகைச் செய்தி

# திரை மறைவில்

### செனட் பவிதக்குக் காவடி:

அடுத்தமாதம் நடுப் பகுதியில் செனட்சபையில் பத்து ஸ்தானங்கள் காலியாகின்றன வல்லவா? செனட்சபையில் இடமொன்றைப் பிடித்துக்கொள்வதற்காக அரசாங்கக் கட்சியோடு தொடர்புள்ளவர்களும், தொடர்பில்லாதவர்ளும் பிரதமர் வதியும் அலரி மாளிகைக்குச் சென்று நாட்டிற்கும் சுதந்திரக் கட்சிக்கும் தாங்கள் செய்த அரும்பெரும் சேவைகளைப்பற்றி விவரிக்கத் தொடங்கியுள்ளார்களாம். வேறுகட்சியொன்றில் நெடுங்காலம் அங்கம் வகித்துவந்த ஒருவர் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் தனக்குமிடையே இருந்துவந்த நெடுங்கால நல்லுறவைப் பற்றிச் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களிடம் சொல்லிக்கொண்டு திரிகின்ருராம்.

### பதவியே பெரிது!

கட்சிக் கொள்கையைப்பற்றிக் கவலைப்படாதே! எக்கட்சியில் சேர்ந்தால் பதவி பெறலாமோ அந்தக் கட்சியில் சேர்ந்துகொள்" - தற்கால அனுபவ மொழி.

### இரகசியம் என்ன?

சிங்களப் படங்களைச் சென்னையில் உற்பத்தி செய்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்போகிறதல்லவா? இலங்கையில் ஒரு படத்தை உற்பத்திசெய்யச் செலவாகும் பணத்தில், சென்னையில் இரண்டு படங்களைத் தயார்செய்து விடலாம் என்று பட உற்பத்தியாளர் சொல்கிருர்கள். சிங்களப் பட உற்பத்தி, மூன்று தமிழ்க் கம்பெனிகள் கையில் இருப்பதுதான், பட உற்பத்தியில் அரசாங்கம் அக்கறை காட்ட வழிகோலியது என்று படஉற்பத்தியோடு தொடர்புடையவர்கள் கூறிக்கொள்கின்ருர்கள்.

### காலைப்பிடித்து ...

"ஆடும் தெய்வம்-இது-ஆடும் தெய்வம்
அமைச்சர்களின் காலைப் பிடித்துநிதம்...(ஆடும்...)"

தமிழ்ப் பிரதிநிதியெவரும் என்னேடு சண்டைக்கு வந்துவிடவேண்டாம். எவரையும் குறிக்கவில்லை இது.

### நகரசபை கலைக்கப்படுமா?

கல்முனை நகரசபையைக் கலைப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. முதலியார் எம். எஸ். காரியப்பரின் ஆதிக்கத்திலுள்ள கல்முனை நகரசபையைக் கலைத்துவிடவேண்டுமென்று சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு தலஸ்தாபன அமைச்சருக்கு முன்னும் பின்னும் திரிவதாகவும் செய்திகள் நமக்குக் கிட்டியிருக்கின்றன. அவர்களின் முயற்சிகள் எவ்வளவு தூரம் பலிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### யார் அந்தப் பிரதிநிதி?

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
அரசாங்க ஆதரவு எனக்கிருக்கும் வகையிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"
— இப்படிப் பாடிக்கொண்டு திரியும் முஸ்லிம் பிரதிநிதி யார்?

### விலகிவிட்டாராம்!

அடங்காத் தமிழர் சி. சுந்தரலிங்கம் அரசியலில் மீண்டும் குதிக்கப்போகிருர் என்ற வதந்தியில் எவ்வித உண்மையும் இல்லைப்போல் தெரிகிறது. அண்மையில் வழக்கறிஞர் ஒருவர் அவரைப்பார்க்க அவருடைய வவுனியாத் தோட்டத்திற்குச் சென்ருராம். அந்த வழக்கறிஞரைப் பார்த்ததும் "நான் பொதுச் சேவையிலிருந்து விலகிவிட்டேன். ஏதாவது வழக்குக்குத் தோற்றுவதென்ருல் முதலில் காசைக் கொண்டுவா" என்று சொன்ஞராம் அடங்காத் தமிழர். "நான் வழக்கைப்பற்றிப் பேச வரவில்லை. சும்மா உங்களைக்கண்டு பேசிவிட்டுச்செல்ல வந்தனுன்" என்று பதிலிறுத்தாராம் அந்த வழக்கறிஞர்.

### வெங்காயம்!

வெங்காய இறக்குமதி முழுவதையும் கூட்டுறவு மொத்த விற்பனவு சங்கம் மேற்கொள்ளப் போகிறதாம். அவர்கட்கு ஏற்ற பொருளைத்தான், இறக்குமதிசெய்ய முடிவுசெய்திருக்கிருர்கள்!

### இது நியாயமா?

தடுப்புக்காவலில் இருக்கும் தமிழ் அரசியல்வாதி ஒருவர் மகன் வெளிநாட்டு விவகார இலாகாவில் பெரிய உத்தியோகம் ஒன்று பார்த்து வருகிருர். தந்தைதமிழுரிமைக்காகப் போராடித் தடுப்புக்காவலில் இருக்கும்போது அவருடைய மகன் தன்னுடைய உத்தியோக உயர்வுக்குத் தேவையான சிங்கள மொழி தராதரப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கிருராம்.

### எழுத்தாளர் காய்ச்சல்.

இலங்கை எழுந்தாளர்களிடையே பெரிய காய்ச்சல் ஒன்று பரவி வருகிறது. அதுதான் எழுத்தாளர் காய்ச்சல். இக்காய்ச்சல் உடையவர்கள் 'அதிலிருந்து திருடினுன்' 'இதிலிருந்து களவாடினுன்' 'அவனைப் பிடித்துப் பிரசுரித்தான்' 'இவனைப் பிடித்துப் பரிசைப் பெற்றுவிட்டான்' என்று பிதற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

### உதவி மந்திரி?


மந்திரி சபை விஸ்தரிக்கப்படக் கூடும் என்ற பேச்சு அடிபட ஆரம்பித்ததும் ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் முஸ்லீம் பிரதிநிதியொருவரும் உதவி மந்திரிப் பதவியையாவது தட்டிக்கொள்ள வேண்டுமென்று தங்களாலான நடவடிக்கைகளை மேற்

(11-ம். பக்கம் பார்க்க)

# "இப்படியும் நடந்திருக்குமா?"

—'தெய்வம் போல்' வந்து, கிராமத்தில் குடியேறி இலவச வைத்தியம் செய்த டாக்டரைப் போலிசார் கைது செய்த பின்னர், நீதிபதி தீர்ப்பளித்ததும், லாசேல் கிராமத்துமக்கள் இப்படித்தான் பேசிக்கொண்டார்கள். ஆனால்—

# நடந்தது உண்மையேதான்!



அவருடைய கோட் பையிலிருந்து கரன்ஸி நோட்டுகளை உரிமையுடன் வெளியிலெடுத்தாள் அவள்!

அமெரிக்காவிலுள்ள லாஸேல் என்ற சிறு கிராமம் முழுவதும் அன்று ஒரே பரபரப்பாகஇருந்தது. அந்தக் கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கு வைத்தியம் செய்யும் ஒரே டாக்டரான மிஸ். மொரினைப் போலிஸ்காரர்கள். கைது செய்துகொண்டு போனதுதான் அந்தப்பரபரப்புக்குக்காரணம்!கிராமத்திலுள்ள ஜனங்கள் எல்லாம போலிசாரைத் தூஷித்தனர். போலிஸ்காரர்கள் என்னகாரணத்தினால் டாக்டர் மொரினைக் கைது செய்தனர் என்பது கிராமத்து ஜனங்களுக்குத் தெரியாது!

அன்று விசாரணை மண்டபம் லாஸேல் கிராமத்து ஜனங்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. குற்றவாளிக் கூண்டில் தலையைக் கவிழ்ந்தபடியே நின்றுகொண்டிருந்தாள் மிஸ். மொரின். நீதிபதி விசாரணையின் பின்னர் அவளுக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதித்தார்! விசாரணையின்போது, போலிஸ்காரர்களின் தரப்பில் விவாதித்த நியாயவாதி சொன்ன அந்தச் செய்தியைக் கேட்ட கிராமத்து மக்கள் "இப்படியும் நடந்திருக்குமா?" என்று அதிசயித்தனர்.

லாஸேல் கிராமத்துமக்களில் பெரும்பாலோர் உழவர்கள். மரம் வெட்டும் தொழிலாளர்களும் அங்கு இருந்தார்கள். திடீரென்று யாருக்காவது சுகவீனம் ஏற்பட்டுவிட்டால், அவசரத்திற்கு அந்தக் கிராமத்தில் ஒரு டாக்டர் கூட இல்லை. நோயாளிகளை அருகிலிருக்கும் நகருக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் 'தெய்வம் போல்' அந்தக் கிராமத்துக்கு வந்து குடியேறினாள் டாக்டர், மிஸ். மொரின்.

கிராமத்தில் ஒரு சிறு வைத்திய சாலையை ஆரம்பித்தாள். கிராமத்து ஜனங்களுக்கெல்லாம் இலவசமாக வைத்தியம் செய்தாள். சிறுவர் முதல், பெரியவர்கள் வரையில் அந்தக் கிராமத்து மக்கள் அவள் மேல் உயிரையே வைத்திருந்தனர். காலை பத்து மணிக்கு வைத்திய சாலையைத் திறப்பாள். பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் மூடிவிடுவாள். இதற்கிடையில் நோயாளிகளும், காயம் பட்டவர்களும் அங்கு வந்து அவளிடம் மருந்து வாங்கிச் செல்லுவார்கள், மிஸ் மொரின் வசித்து வந்த வீடு மிகச் சிறியதுதான். ஆனால் அழகாக இருந்தது. ஒரு பெரிய வெள்ளை நாயை மட்டும் அவளுடன் வளர்த்துவந்தாள் மொரின். தனக்குத் தேவையான மருந்துச் சாமான்களையும், மற்றும் துணி, பஞ்சு முதலிய வைத்தியத்திற்கான பொருட்களையும் அவளிடம் ஏடுத்துக் கொடுக்கும் அந்த நாய்க்குப் பேசத்தான் தெரியாதே ஒழிய, மொரின் பேசுவதெல்லாம் அந்த நாய்க்குநன்றாகவிளங்கும். சிற்சில சமயங்களில்அவள் கொடுத்தனுப்பும் கடிதங்களை அருகிலுள்ள நகரத்துக்கு எடுத்துச் செல்வதும் கூட அந்த நாய்தான்! அத்தனை விதத்தில் அந்த நாயைப் பழக்கி வைத்திருந்தாள் மொரின்.

பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் தனது வைத்திய சாலையையும், வீட்டையும் பூட்டிவிட்டு, நாயுடன் காரில் ஏறி வெளியேறிவிடுவாள். கடற்கரையில் உலாவிக் கொண்டிருப்பதில் பிற்பகல் முழுவதும் கழிப்பாள்.

வழக்கம் போல் ஒரு நாள் கடற்கரையில் நாயுடன் உலாவிக் கொண்டிருந்தாள் மிஸ். மொரின். அன்று ஏனோ கடற்கரையில் கூட்டமில்லை. சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் ஒருவர். ஆஜானுபாகுவாக, அழகான உடையணிந்து தோற்றமளித்த அவரைப் பார்ப்பதற்கு, ஒரு செல்வந்தரைப்போல் காட்சியளித்தார். தன் கவனத்தையெல்லாம் பத்திரிகையிலேயே பதிய வைத்திருந்தார் அவர்.

திடீரென்று தன் அருகில் நாய் குரைக்கும் சப்தம் கேட்கவே, தலையை நிமிர்த்தி எதிரில் நோக்கினார். அவர் காலை நக்கிக்கொண்டு, அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது ஒரு அழகிய வெள்ளை நாய். அதைப் பக்கத்தில் அணைத்துத் தடவிக்கொடுத்தபடியே முன்னால் நோக்கினார். சற்றுத் தூரத்தில், நாயைப் பிடிப்பதற்காக ஓடி வந்துகொண்டிருந்தாள் ஒரு அழகிய பெண், அவள் தான் டாக்டர் மொரின்,

ஓடி வந்த அவள், அந்த மனிதருக்குப் பக்கத்தில் வந்ததும் சற்றுத் தயங்கி நின்றுவிட்டாள். அவள் கண்கள் இரண்டும் ஆச்சரியத்தால் அகல விரிந்தன சற்று நேரம் அந்த இடத்திலே மௌனமாக நின்று கொண்டிருந்த அவள்" பேச ஆரம்பித்தாள்:

"நீங்கள்.........."

"நான் தான் ஜோர்ஜ்...... ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என்னை நீங்கள் இதற்கு முன் சந்தித்திருக்கிறீர்களா?...... நான் உங்களைச்சந்தித்ததாக எனக்கு ஞாபகமில்லையே!..." என்று பேசிக்கொண்டிருந்தார் அவர்.

"நீங்கள் மிஸ்டர் பௌல் இல்லை?........"—அவள் கேட்டாள்.

"பௌலா?......யார் அது? ........என் பெயர் ஜோர்ஜ் ........"

"ஓ............மன்னிக்கவேண்டும், எனக்கு ஒரு அத்தான் இருந்தார். 'சொந்த மாமியின் மகன்!........ சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு மோட்டார் விபத்தில் அவர் இறந்துவிட்டார். உங்களைப் பார்த்தால், அவரைப் போலவே தோற்றமளிக்கிறீர்கள். கொஞ்சமும் மாற்றமில்லை. அது தான்..."

"ஓஹோ... அப்படியா? நான் சொல்கிறேனென்று கோபித்துக்கொள்ளாதீர்கள். நான்உண்மையிலேயே உங்கள் அத்தான் இல்லை. வேண்டுமானால் நீங்கள் என்னை உங்கள் அத்தானாக நினைத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஒரு ஆட்சேபனையுமில்லை" என்று சொல்லி விட்டுச் சிரித்த அவர், "நின்றுகொண்டிருக்கிறீர்களே. இப்படி அமருங்கள்" என்று சொல்லித் தான் அமர்ந்திருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினார்.

"இல்லை, அதோ என் கார் இருக்கிறது. அதில் உட்கார்ந்து வேண்டுமானால் பேசிக்கொண்டிருக்கலாமே!" என்று ஜோர்ஜ்ஜை அழைத்தாள் மொரின். அவரும் தடை சொல்லவில்லை. எழுந்து அவளுடன் நடந்தார்.

அவர் வலது கையுடன் தன் இடது கையை இணைத்தபடியே நடந்து, காரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள் அவள். காரைச் சமீபித்தவுடன், அவரது தோள்களை இறுக அணைத்துக்கொண்டு, "டார்லிங்!......" என்று குழைந்தாள். அவள் செய்கைகள், ஏதோ பல ஆண்டுகளாகப் பழகும் ஒரு ஆடவருடன் பழகுவதைப்போலிருந்தது.

அவளுடைய கொஞ்சல்களுக்கெல்லாம் இடம் கொடுத்துக்கொண்டிருந்தார் ஜோர்ஜ். அவரைத்தன் மார்போடு தழுவிக்கொண்டே, "இனிமேல் நான் உங்களை பௌல் என்றுதான் கூப்பிடப்போகிறேன்! ..." என்று குழைந்தாள், அவரது கழுத்தை வருடிக்கொண்டிருந்த அவளுடையகை, படிப்படியாகக் கீழே இறங்கி அவருடைய கோர்ட்பையைத்துழாவியது. அதனுள்ளிருந்த கரன்ஸி நோட்டுக்கட்டுகளை 'உரிமையுடன்' வெளியில் எடுத்தாள் அவள்.

சற்று நேரம் மௌனமாக நின்றுகொண்டிருந்தார் ஜோர்ஜ். அவர் வாய் லேசாகப் புன்முறுவலித்தது. தன் கால் சட்டைப் பைக்குள் கையை விட்டு, ஒரு பொருளை வெளியில் எடுத்தார்.

அது—

ஒரு விசில்! அதை வாயில் வைத்து 'வீல்' என்று ஊதினார். அதைக்கண்ட மொரின் திடுக்கிட்டுப்போய், அங்கிருந்து ஓடத் தலைப்பட்டாள். ஆனால், அதற்குள் அவள் கையைச் செட்டியாகப் பிடித்துக் கொண்டார் ஜோர்ஜ்.

சற்று நேரத்தில் ஒருகார் அவர்களுக்கு முன்னால் வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து சில போலிஸ் உத்தியோகஸ்தர்கள் கீழிறங்கினர். மொரின் அழுதாள். பிரயோஜனமில்லை. அவளையும், ஜோர்ஜையும் காரில் ஏற்றிக் கொண்டு சென்றனர் அந்தப் போலிஸ்காரர்கள்.

ஜோர்ஜ் என்பவர் வேறு யாருமலல. துப்பறியும் போலிஸ் இலாகாவைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரி அவர். பௌல் என்ற கற்பனைப் வபயரைச் சாதகமாக வைத்துக்கொண்டு, பணத்துக்காகப் பல செல்வந்தர்களுடன் சரசலீலைகள் புரிந்து வந்தாள் மொரின். உண்மையில் அவள் ஒரு டாக்டருமல்ல. தான் வசித்து வந்த கிராமத்து மக்களை ஏமாற்றுவதற்காகவே அவள் டாக்டராக நடித்தாள்.

உண்மை ஒரு நாள் வெளிப்படத்தானே வேண்டும்? துப்பறியும் நிபுணரிடமே தன் சாகசத்தைக் காட்டப் புகுந்த மொரின், வசமாக மாட்டிக் கொண்டாள்! ஜோர்ஜ் அவளைக் கைது செய்வதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்ததும்; முன் எச்சரிக்கையோடு போலிஸ்காரர்களை ஒழித்து வைத்திருந்ததும் மொரினுக்கு எங்கே தெரியப் போகிறது?

நீதிபதி தீர்ப்பைக் கூறியதும் சிறைச் சாலை அதிகாரிகள் மொரினை அழைத்துச் சென்றனர். தலையைக் குனிந்த வண்ணமே அவர்கள் பின்னால் சென்றாள் மொரின்.

# "அன்று நான் நாஸ்திகன் அதே நான், இன்று ஆஸ்திகன்!"


## சிவாஜி கணேசன் சொன்னது!

சினிமா நடிகை திருமதி டி. ஆர். ராஜகுமாரியின் உறவுப் பெண்ணான திருமதி. எஸ். பி. எல். தனலட்சுமியின் மகள், குமாரி ஜோதிலட்சுமியின் நடன அரங்கேற்றம் அண்மையில் சென்னை வாணிமஹாலில் நடைபெற்றது. நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அதற்குத் தலைமை தாங்கினார்.

"நான் சிறுவயதுப் பையனாக இருந்த காலத்தில் தஞ்சைப் பெரியகோவிலுக்குப் பின்புறமாக, நடனம் ஆடுவதைப்போல் காட்சியளிக்கும் சிற்பங்களைக் கண்டு ரசிப்பேன். அப்பொழுது நான் ஒரு நாஸ்திகன். ஆனால் அதே நான், இன்று தெய்வபக்தி நிரம்பிய உள்ளத்தோடு உண்மை ஆஸ்திகனாக வாழ்கிறேன்!

அண்மையில் நான் தஞ்சைக்குச் சென்றிருந்தபோது, நான் முன்பு கண்டு ரசித்த அந்த நடனச் சிலைகளைப் பார்க்கப்போனேன். ஆனால், அந்தச் சிலைகளை அங்கு காணமுடியவில்லை! 'சிலையைக்கூட திருடுவார்களா'? என்று எண்ணினேன். ஆனால் இங்கு வந்து, குமாரி ஜோதிலட்சுமியின் நடனத்தைக் கண்டபோதுதான், தஞ்சையில் காணமற்போன அந்தச் சிலை உயிர்பெற்று இங்கு வந்து ஆடியிருக்கிறது என்று தெரிந்தது..." என்று கூறினார் கணேசன்.

அந்த நடன அரங்கேற்றுவிழாவிற்கு நடிகர் அசோகன், நடிகைகள் ஈ. வி. சரோஜா, என். எஸ். கே. மதுரம், ஜி. சகுந்தலா, லட்சுமிப்பிரபா ஆகியோரும்; மற்றும் பல படஉலகப் பிரமுகர்களும் வந்து கலந்து கொண்டனர்.



மாடி லட்சுமியின் மயக்கும் மோகனப் பார்வை!

## எம். ஜி. ஆரைப் பற்றி ...

மனிதனாகப் பிறந்து விட்ட எவருக்கும் நல்ல பழக்கந்தான் வாழ்க்கையை வளமாக்க உதவுகிறது. ஆனால் சிலருக்குக் கெட்ட பழக்கமே அவர்களுடன் இணைந்து விடுகிறது. அத்தகைய கெட்ட செயல்களைக் களைந்து, நல்லவர்களாக வாழ்வதுதான் தனிசிறந்ததாகும்.

எம். ஜி. ராமச்சந்திரன் சில கெட்ட பழக்கங்களை அடியோடு வெறுக்கிறார். அவைகளாவன: குடித்தல், கெடுத்தல், கொள்கை மறத்தல், நிந்தித்தல், தாய், தந்தை, ஆசான் முதலியோரை வணங்காமை இவை போன்றவைகளைப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வெறுக்கிறார்!

### தேர்தலில் திரு வாசன்!

ஜெமினி ஸ்டுடியோ அதிபரும், படத்தயாரிப்பாளரும், "ஆனந்த விகடன்" ஆசிரியருமாகிய திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் வரும் பொதுத்தேர்தலுக்கு நிற்க ஆயத்தம் செய்து வருகிறார்!

மக்கள் சபைக்கான தேர்தலில் திரு. வாசன் போட்டியிடுவார். முன்னாள் நிதியமைச்சர் திரு. டி. டி. கே. தொகுதியில் வாசன் நிற்பாரென்றும் தெரிகிறது.

### இயேசு கிறிஸ்து எம் ஜி. ஆர்!

'தாங்கள் இயேசு கிறிஸ்துவாக நடிக்கிறீர்களா?' என்று எம். ஜி. ஆரிடம் கேள்விகள் கேட்கப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், 'நான் இயேசு கிறிஸ்துவாக நடித்து, அந்தப்படம் எடுக்கப்படுமானால் அதற்கு இயக்குநர் ப. நீலகண்டனாகத் தான் இருப்பார். செஸில் பி. டிமிலியாரின் 'கிங் ஆப்கிங்' என்பதைத் தழுவி, பாதிரிமார் போன்றவர்களிடம் ஆலோசனை கேட்டு, அனுமதியும் பெற்றபிறகு தான் எடுக்கப்படும்' என்று கூறினார்.

### எம். ஜி. ஆர், தி. மு. க. விலிருந்து விலகுவார்?

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல்லாண்டுகளாகப் பணியாற்றிவரும் புரட்சி நடிகர், கழகத்திலிருந்து விலகுவாரா? என்ற வினா சென்னையில் பொதுமக்களிடத்தில் பரவியுள்ளது. இது பற்றி ஒரே பரபரப்பாகவும் உள்ளது. விலகுவது பற்றி அறிக்கை விரைவில் வரும் என்று எம். ஜி. ஆரே பத்திரிகைகளில் எழுதியுள்ளார். எனவே அவரது அறிக்கையினைக் காண அனைவரும் ஆவலாகவும், கவலையாகவும் இருக்கின்றனர்.

'நீங்கள் தி. மு. க. விலிருந்துவிலகி விடுவீர்களா?' என்று எம். ஜி. ஆரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர், "காலம் பதில் சொல்லும்" என்று பதிலளித்திருக்கிறார்.

பி. வி. கிரி தொகுத்தது.

### மகாலட்சுமி!

நாராயணன் கம்பெனியாரின் கனகா மூவிஸார், "மகாலட்சுமி" என்ற படத்தைத்தயாரிக்கின்றனர்.

ஜெமினிகணேசன், சௌகார் ஜானகி, ஈ. வி. சரோஜா, தங்கவேலு, எம். சரோஜா ஆகியோர் நடிக்கின்றனர்.

ஜெமினி கணேசனோடு முதன்முறையாகக் கதாநாயகியாக ஈ. வி. சரோஜா இந்தப்படத்தில்தான் நடிக்கிறார்!

சௌகார் ஜானகியின் உள்ளமுருக்கும் நடிப்பும்; தங்கவேலு, சரோஜாஜோடியின் வயிறு வெடிக்கவைக்கும் நகைச்சுவையும் இப்படத்தில் குறிப்பிடத் தக்க அம்சங்களாக இருக்குமாம்!

பெண்மையின் தியாக உள்ளத்தைச் சித்திரிக்கும் இப்படத்தின் கதை—வசனத்தை கே. வி. சீனிவாசன் எழுதியிருக்கிறார். அவரேதான் இப்படத்தை டைரக்ட் செய்துமிருக்கிறார். கவிஞர் கண்ணதாசனின் பாடல்களுக்கு விசுவநாதன் — ராமமூர்த்தி இசை அமைத்திருக்கின்றனர்!

## கப்பலோட்டிய தமிழன்!

வெள்ளையரின் பிடியிலிருந்து விடுதலை பெற, விடாது சேவை செய்த தேசபக்தர் வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கையை சுவை குன்றாமல் பத்மினி பிக்சர்சார் படமாக்கி வருகின்றனர். இப்படத்தின் வசனத்தை விடுதலைப்போரில் பங்குகொண்ட கலைஞர் எஸ். டி. சுந்தரம் எழுதி இருக்கிறார். எழுச்சி மிக்க, பொருள் பொதிந்த 'எஸ். டி. எஸ்'ஸின் வசனம், கப்பலோட்டிய தமிழனுக்கு சிறப்பூட்டும்படியாக அமைந்திருக்கிறதாம்.

சிதம்பரனாராக, நடிகர் திலகம் சிவாஜி கணேசனும். அவர் மனைவியாக நட்சத்திர நடிகை ருக்மணியும் நடிக்கிறார்கள்! இவர்களின் குழந்தைகளாக, மாஸ்டர் கிருஷ்ணனும், பேபி பத்மினியும் சக்கைப்போடு போடுகிறார்களாம்! பாரதி சுப்பையா பிரமாதமாம்! ஜெமினி கணேசன், சரோஜாதேவி, அசோகன் டி. கே. சண்முகம் மற்றும் ஏராளமான நடிகர்கள் நடிக்கும் இப்படத்தை தயாரிப்பாளர் திரு. பி. ஆர். பந்துலுவே டைரக்ட் செய்கிறார். ஜீ. ராமநாதன் இசை அமைக்கிறார்.

## 'ப' டைரக்டரின் புதிய படம்

### "பார்த்தால் பசிதீரும்!"

ஜி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் படத்திற்கு, "பார்த்தால் பசிதீரும்" என்று பெயரிட்டிருக்கின்றனர்!

'ப' என்ற எழுத்தில் படத்தின் பெயர் ஆரம்பித்திருப்பதைப் பார்த்தால், டைரக்டர் பீம்சிங்தான் இந்தப் படத்தையும் டைரக்ட்செய்கிறார்என்றுசொல்லாமலே விளங்கும்!

'முரசொலி' மாறன் வசனமெழுதும் இப்படத்தில் சிவாஜி, ஜெமினி, சரோஜாதேவி, சாவித்திரி முதலிய பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடிக்கின்றது! படமும் மிக வேகமாக ஏ. வி. எம்மில் வளர்ந்து வருகிறது.

சாவித்திரியும் சரோஜாதேவியும் முதன்முதலில் ஒன்றாகச் சேர்ந்து நடிக்கும் இந்தப் படத்தைப் 'பார்த்தால் பசிதீரும்' என்று பல ரசிகர்கள் பேசிக்கொள்கிறார்கள். கவிஞர் கண்ணதாசனின் பாடல்களும், விசுவநாதன்—ராமமூர்த்தியின் இசையமைப்பும் இப்படத்திற்கு மெருகு தருமாம்!

**எத்தனை விசித்திரமான உலகம் இது! ஒருகாலத்தில் ஒரு மைல் தூரத்திற்கு நடந்துசெல்லுமுன் மனிதன் எத்தனை துன்பங்களை அ**
**எத்தனையோ கோடானுகோடி மைல் தூரத்திற்கு, அதுவும் வானவீதியில், வாயுவேகம் மனோவேகமாகப் பறந்து சென்று, க**
**முயலுகின்றான் மனிதன்! இன்னும் எத்தனை எத்தனை அற்புதங்களெல்லாம் எதிர்காலத்தில் நடக்கப் போகின்றனவோ?...**
**இரண்டு யுவதிகளும் சந்திர மண்டலத்துக்குப் பயணம் செய்து பெற்ற அனுபவத்தை இக்கட்டுரையில் நீங்கள் படிக்கப் போ**
**திர மண்டலத்திற்குப் போனால், பாஸ்கரன், வசந்தி, உஷா ஆகியோருக்கு ஏற்பட்ட அனுபவம் நமக்கும் ஏற்படுவது உறுதி!**
**படிப்பது நல்லது. உங்கள் வாழ்க்கையிலும் இப்படி ஒரு பயணம் செய்ய நேரிடக் கூடும். யார் கண்டார்கள்!**

**அதோ...! வசந்தி மூர்ச்சையடைந்து விழுந்து விட்டாள். அவள் மூக்**
**உஷா அவளிடம் விரைந்தாள், ஒரே எட்டில்!... பத்தடி தூரத்தை ஒரே**
**ளே? விரைந்து சென்ற உஷா, வசந்தியின் சுவாசக் கருவியை அவள**
**டாள். சில வினாடிகளில் வசந்தி மெள்ள எழுந்தாள்!... இப்படியே—**

# சந்திரமண்டலப் பிரய
# சில சுவையான அ

உஷாவும், பாஸ்கரனும் பைலட்டுகளுக்குரிய ஆசனங்களில் அமர்ந்து, புதிய முறையிலான அந்த விமானத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர். நானும், வசந்தியும் அவர்கள் இருவரது செயல்களையும் பார்த்து வியந்தபடி நின்றோம்.

பாஸ்கரன் எனது முகத்தில் தெரிந்த ஐயக் குறிப்பைக் கண்டதும் "சந்திர மண்டலத்திற்குத்தான் போகிறோம்" என்று கூறினான்.

"விமானம் வெகு வேகமாகப் போகின்றதுபோல் தெரிகிறதே? இவ்வளவு வேகமாக விமானத்தைச் செலுத்த எந்தச் சக்தி பயன்படுத்தப் படுகிறது?" என்று வசந்தி கேட்டாள்.

"அணுசக்திதான் இத்துறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அணு சக்தியை அழிவு வேலையில் பயன்படுத்தாது ஆக்கவேலையில் ஈடுபடுத்தும் வழியை மனித சமூகம் கண்டுகொண்டதன் விளைவே இது" என்று உஷா விடை கூறினாள்,

"சந்திர மண்டலத்தையடைய இன்னும் எத்தனை நாட்கள் உள்ளன?" என்றாள் வசந்தி.

"நாட்களா! இன்னும் சில மணிநேரத்துக்குள் நாம் அங்கு சென்றுவிடலாம்" என்றான் பாஸ்கரன்.

"நாங்கள் அங்கு போய்ச் சேருவதற்கு முன்னால் சந்திரனைப் பற்றிய சில விபரங்களை நீங்கள் சொல்லுவீர்களானால் அங்கு காணும் காட்சிகளை நாங்கள் நன்கு அனுபவிக்க முடியும்" என்று கூறினேன்.


"அதற்கென்ன, தாராளமாகச் சொல்கிறேன்' என்று தொடங்கிய உஷாவின் இருபக்கத்திலும் நானும் வசந்தியும் உட்கார்ந்துகொண்டோம். 'வானத்தில் சூரியனுக்கு அடுத்தபடியாக நமது கவனத்தைக் கவரும் கோளம் சந்திரனே. இது உண்மையில் மிகச் சிறிய கோளம். ஏனெனில் விண்ணிலுள்ள பலகோடி விண்மீன்களுள் ஒன்றே சூரியன். சூரியனை பூமி, வியாழன், சனி, போன்ற பல கோளங்கள் வலம் வருகின்றன. இக்கோளங்களே கிரகங்கள் அல்லது கோள்கள் எனப்படுவன, இவை சூரியனுடைய குழந்தைகள் போன்றவை! சில கிரகங்களைச் சுற்றிச் சிறு சிறு கோளங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன, இவை சூரியனின் பேரக் குழந்தைகள்போன்றவை. இவற்றை உபகிரணங்கள் என்பர். இவற்றுள் மிகப்பெரிய உபகிரகமாகிய சந்திரன் பூமியை வலம் வருகின்றது'

"உலகத்தில் மிகச் சிறு பகுதிபோன்றல்லவோ சந்திரன்தோன்றுசிறது"? என்றேன் நான்.

"ஆம், அதைவிட மிகச் சிறியவர்கள் நாமெல்லோரும்" என்று குறுக்கிட்டாள் வசந்தி.

'உண்மையில் சந்திரன் ஒரு பெருங்கோளந்தான். 2160 மைல்கள் குறுக்களவுள்ளது இது. பூமியின் நிறையில் எண்பதில் ஒரு பங்காகும் இதன் நிறை" என்று விளக்கினான் பாஸ்கரன்,

"சரி, சந்திரவுலகம் நெருங்கிவிட்டது. உங்களுடைய சிறப்பு உடைகளை அணிந்து கொள்ளுங்கள்" என்று உஷா கூறவும் நானும் வசந்தியும் விமானத்தில் ஒரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த உடைகளை அணிய



முற்பட்டோம். 'இவ்வுடையில் என்ன சிறப்பு உள்ளதோ தெரியவில்லையே' என்று வசந்தி முணுமுணுத்தது உஷாவுக்குக் கேட்டுவிட்டது. "சந்திரவுலகிலுள்ள இன்னல்களைப்போக்கும் ஆற்றல் இந்த உடைக்கு உண்டு. இதனுள் சுவாசிக்க வசதி, உடல் வெப்பத்தையும் ரத்த அமுக்கத்தையும் மாறாது பாதுகாக்கும் கருவிமுதலியன அமைந்துள்ளன" என்று உஷா எங்களைப் பார்த்துக் கூறினாள்,

ஓடும் வண்டியைத் திடீரென நிறுத்தும் போது ஏற்படுவபோல திடீரெனப் பின்நோக்கித் தள்ளப்பட்டோம். ஆனால் ஒரு அதிசயம்! விமானம் தரையோடு மோதும் ஒலி ஒன்றும் கேட்கவில்லை. "எல்லாரும் கவனமாக இறங்குங்கள்! சுவாசிக்கும் கருவியை நன்கு பொருத்திக் கொள்ளுங்கள்! வேகமாக அடி எடுத்து வைக்காதீர்கள்! மெதுவாக நடந்து செல்லுங்கள்!" என்று பாஸ்கரன் கட்டளையிட்டுக்கொண்டிருந்தான்.

அதற்குள் .......... அதோ வசந்தி மூர்ச்சையடைந்து விழுந்து விட்டாள், மூக்கிலிருந்து ரத்தம் பெருகுகிறது. உஷா அவளிடம் விரைந்தாள், ஒரே எட்டில்........! பத்தடி தூரத்தை ஒரே எட்டில் தாண்டிவிட்டாளே? விரைந்து சென்ற உஷா வசந்தியின் சுவாசக் கருவியை அவள்து மூக்கில் நன்கு பொருத்தி விட்டாள். சில வினாடிகளில் வசந்தி மெள்ள எழுந்தாள்.

'இதற்குக் காரணம்......?' என்று அவசரத்தோடு வினவினேன்.

'தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பூமியின் நிறையைவிடச் சந்திரனின் நிறை மிகக் குறைவு. எனவே கவர்ச்சித் திறன் மிகவும் குறைவு பூமியின் திறனில் ஆறில் ஒரு பங்கே! இந்தக் காரணத்தால் சந்திரனைச் சுற்றியிருந்த காற்றணுக்கள் அதன் கவர்ச்சிக்குட்படாது தப்பி ஓடிவிட்டன; இப்போது இங்கு காற்று மண்டலமே கிடையாது. இதன் காரணமாகத் தோன்றும் இன்னல்களுள் இப்போது நிகழ்ந்ததும் ஒன்று...... அதனைத் தவிர்க்கவே சுவாசக் கருவியை நன்கு பொருத்திக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன்"

"மூக்கில் ரத்தம் வருவதற்கும் காற்று இல்லாததற்கும் என்ன தொடர்பு?"

"பூமியிலிருக்கும்போது நம்மைச் சுற்றியுள்ள காற்று நமது உடலை அழுத்துகின்றது. உடலினுள் ஓடும் ரத்தமும் உள்ளிருந்து அழுத்துகின்றது. இவ்வாறு உள்ளும் புறமும் ஒரே அமுக்கமாக இருப்பதால் பூமியில் சுவாசிக்கும் போது கடினமாக இல்லை; ஆனால் பூமியிலும்கூட காற்றின் அமுக்கம் குறைவாயுள்ள மலை உச்சிகளின் மீது ஏறும்போது மூக்கிலிருந்து ரத்தம் வெளிப்படும், ஏனெனில் காற்றின் அமுக்கம் குறைவாயும், உள்ளே ஓடும் ரத்தத்தின் அமுக்கம் மிகுதியாகவும் இருப்பதால் ரத்தக் குளாய்கள், அவற்றிலும் மூக்கிலுமுள்ள மெல்லிய குழாய்கள் வெடித்துவிடும். சந்திர மண்டலத்தில் காற்றின் அமுக்கம் மிக மிகக் குறைவு. ஆதலால்தான் இங்கும் அத்தகைய இன்னல்கள் தோன்றுகின்றன"— இதனைக் கேட்டதும் என் கைகள் தானாகவே என் மூக்கை நோக்கிச் சென்றன. சுவாசிக்கும் கருவி பொருந்தியுள்ளதா என்று அறிவதற்குத்தான்!

'நீங்கள் பேசும்போது எங்கள் காதுக்கு அருகில் வந்து இரைந்து பேசுகின்றீர்கள்! நாங்கள் செவிடர்களா என்ன? என்று வின்வினாள் வசந்தி:

பாஸ்கரன் புன்சிரிப்போடு பதில் சொன்னான்: 'ஒரு விதத்தில் சந்திர மண்டலத்தில் இருக்கும்போது நாம் எல்லோருமே செவிடர்கள் தான். இங்கு காற்று இல்லையல்லவா? எனவே நாம் பேசுவது ஒலியலைகளாக மாறிக் கேட்போரின் செவிகளை அடையமாட்டாது. சற்றுத் தூரத்தில் உள்ளவருடைய பேச்சைக் கேட்பது கூடக் கடினம். இதனால்தான் நமது விமானம் தரைமீது மோதியபோது கூட சத்தம் ஒன்றும் கேட்கவில்லை"

"காதலர்கள் உரையாடுவதற்கு மிகவும் வாய்ப்பான இடம்" என்று கூறிவிட்டு என்னையும் வசந்தியையும் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள் உஷா,

"ஏன், பூமியில் உள்ள அரசியல் வாதிகளையும் இங்கு அனுப்பலாமே?" என்றாள் வசந்தி.

'எனக்கு ஒரு சந்தேகம்' என்றேன் நான்.

'என்ன?"

'மூர்ச்சித்து விழுந்தவருக்கு நீங்கள் உதவிசெய்ய விரைந்தபோது பத்தடி தூரத்தை ஒரே எட்டில் கடந்தது எப்படி?"

"அதுவா?" என்று சிரித்துக்கொண்டே விளக்கலானாள் உஷா. 'பூமியில் நாம் ஏன் எளிதாக நடக்கவும், எம்பிக் குதிக்கவும் முடிவதில்லை தெரியுமா? நாம் அவ்வாறு செய்யும்போது பூமி நம்மைக் கவர்ந்து தடைசெய்கின்றது. சந்திரனின் கவர்ச்சித் திறன் குறைவு. அதனால் இங்கு நாம் எளிதில் தாண்டிச் செல்லலாம். எம்பிக் குதிக்கலாம். உதாரணமாக பூமியில் 6 அடி உயரம் எம்பிக் குதிப்பவன் இங்கு 36 அடி எம்பலாம். ஒரு எட்டில் 12 அடி தூரத்தைக் கடக்கலாம்.'

'ஆஹா, இங்கு கிரிக்கெட் விளையாடினால் அடிக்கடி பந்தைப் பவுண்டரிக்கு அடித்து விடலாமே!' என்று தொடங்கினேன் நான்.

'ஆனால் ஒரு தொல்லை! பந்தைப் பிடிப்பவரும் மிக விரைந்து ஓடி பந்தைத் தடுத்து விடுவாரே!' என்று இடை வெட்டினாள் வசந்தி.

என்னுடைய அசட்டுத்தனத்தை மறைப்பதற்கு 'அதோ சூரியன் உதயமாவதுபோலத் தெரிகின்றதே .'என்று கூறினேன்.

"சந்திர உலகில் சூரியன்தோன்றியதும் வெப்பநிலை மிகவும் அதிகரிக்கும். கொதிக்கும் நீரின் வெப்பநிலையை விரைவில் எட்டிவிடும்! அதுபோன்று சூரியன் மறைந்தபின் குளிர் மிக அதிகமாகும். சுவாசிக்கும் காற்று திரவமாக மாறிவிடும்! அவ்வளவு குளிர்!' என்றான் பாஸ்கரன்.

'இத்தகைய உலகத்தில் இருப்பதை யாரும் விரும்ப மாட்டார்களே! எங்கு பார்த்தாலு

ம் வறண்
டையாது.
காதுபோ
இனிப் பூம்
ல வேண்
வெறுப்பு
போவத
சில சிறந்
து விடவே
என்ன தெ
'வெள்ளை
போலத்
'சந்திர
கியபோது
கள் ஏற்ப
டித்து அ
பட்ட சா

எழு

மும் பரவி
ல் சூரிய ஒ
ஒளியுடை
றது.'
'ஓகோ இ
சந்திரனின்
மா? சரி,
பார்ப்போ
'தாராள
அதோ தெ
ன சுவர்பே
மீது ஏறு
திர உலகில்
திற்கு எழு
பாஸ்கரன்.
நாங்கள்
மேலே எழு
லையுச்சி ஓ
வில்லை. சம
இருந்தது.
தபோது
சுவரைப்பே
டது. வளை
ளம் இருந்
புதுமாதிரி
இருக்கின்ற
வியந்தாள்.
'இவை ஒ
லைகளாக

கத்தை அவர்கள் ஆ... லை வணக்கத்தைக் கூற ஆ
த்திருக்கிறார்கள். கலைவிஷ

ல்லுமுன் மனிதன் எத்தனை துன்பங்களை அனுபவித்திருப்பான்! ஆனால், இன்று—
கம் மனோவேகமாகப் பறந்து சென்று, சந்திர மண்டலத்தையே முற்றுகையிட
காத்தில் நடக்கப் போகின்றனவோ?... பாஸ்கரன் என்ற ஒரு இளைஞனும்,
தை இக்கட்டுரையில் நீங்கள் படிக்கப் போகிறீர்கள். உண்மையிலேயே நாம் சந்
அனுபவம் நமக்கும் ஏற்படுவது உறுதி! எனவே கட்டுரையைச் சற்றுக் கூர்ந்து
டும். யார் கண்டார்கள்!

அழுக்கம் கு
உச்சிகளின்
க்கிலிருந்து
ம், ஏனெ
ங்கம் குறை
டும் ரத்தத்
நதியாகவும்
க் குளாய்க
மூக்கிலுமுள்
கள் வெடித்
ண்டலத்தில்
மிக மிகக்
நான் இங்கு
னல்கள்
இதனைக்
கள் தானு
நோக்கிச்

'எனக்கு ஒரு சந்தேகம்' என்றேன் நான்.

'என்ன?"

'மூர்ச்சித்து விழுந்தவருக்கு நீங்கள் உதவிசெய்ய விரைந்தபோது பத்தடி தூரத்தை ஒரே எட்டில் கடந்தது எப்படி?"

"அதுவா?" என்று சிரித்துக்கொண்டே விளக்கலானாள் உஷா. 'பூமியில் நாம் ஏன் எளிதாக நடக்கவும், எம்பிக் குதிக்கவும் முடிவதில்லை தெரியுமா? நாம் அவ்வாறு செய்யும்போது பூமி நம்மைக் கவர்ந்து தடைசெய்கின்றது. சந்திரனின் கவர்ச்சித் திறன் குறைவு. அதனால் இங்கு நாம் எளிதில் தாண்டிச்

ம் வறண்ட பாலை; காற்றேகிடையாது. தண்ணீரும் இருக்காதுபோல் தோன்றுகிறதே! இனிப் பூமிக்குத் திரும்பிச்செல்ல வேண்டியதுதான்.' என்று வெறுப்புடன் நான் கூறினேன்.

போவதற்கு முன் இன்னும் சில சிறந்த காட்சிகளைப் பார்த்து விடவேண்டும். 'இதோ இது என்ன தெரியுமா'?

'வெள்ளை நிறமாகச் சாம்பல் போலத் தோன்றுகின்றதே!'

'சந்திரன் குளிரத் தொடங்கியபோது அதில் பல எரிமலைகள் ஏற்பட்டன. அவை வெடித்து அவற்றினின்று வெளிப்பட்ட சாம்பல்தான் நாற்புற

அணைந்துவிட்டன. இவை போன்ற பல வடுக்கள் சந்திர உலகில் உள்ளன. இவற்றின் குறுக்களவு 40 முதல் 130 மைல்கள் வரை இருக்கும். வரம்பாக அமைந்த மலையின் உயரம் 4500 அடிகள்கூட இருக்கும். இத்தகைய மாபெரும் வடுக்களைத் தவிர மிகச் சிறியன பலவும் உண்டு. இச்சிறு வடுக்கள் சந்திரனின் மேற்புறம் இளகி இருந்தபோது அதன்மீது விண்ணில் அலைந்துகொண்டிருக்கும் இச்சிறு கற்கள் விழுந்து பதிந்ததால் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. மிகப் பெரிய வடுக்களுக்கு கோபர்னி

ந்து விழுந்து விட்டாள். அவள் மூக்கிலிருந்து இரத்தம் பெருகுகிறது.
ரே எட்டில்!... பத்தடி தூரத்தை ஒரே எட்டில் அவள் தாண்டிவிட்டா
சந்தியின் சுவாசக் கருவியை அவளது மூக்கில் நன்கு பொருத்தி விட்
மெள்ள எழுந்தாள்!... இப்படியே—

# டலப் பிரயாணத்தில்

# சுவையான அனுபவங்கள்

எழுதுபவர்: **பொன்னுலைக் குமாரசாமி**

கும் கருவி
ான்று அறி

பாது எங்க
வந்து இ
கள்! நாங்
ன்ன? என்
றி:

ப்போடு
ரு விதத்
த்தில் இ
எல்லோரு
ன். இங்கு
ா? என
ஒலியலைக்
ாரின் செ
ாது. சற்
வருடைய
டக் கடி
மது விமா
றியபோது
கேட்க

யாடுவத
ான இட
என்னை
ார்த்துக்
உஷா.

ள அரசி
த அனுப்
ந்தி.

செல்லலாம். எம்பிக் குதிக்கலாம். உதாரணமாக பூமியில் 6 அடி உயரம் எம்பிக் குதிப்பவன் இங்கு 36 அடி எம்பலாம். ஒரு எட்டில் 12 அடி தூரத்தைக் கடக்கலாம்.'

'ஆஹா, இங்கு கிரிக்கெட் விளையாடினால் அடிக்கடி பந்தைப் பவுண்டரிக்கு அடித்து விடலாமே!' என்று தொடங்கினேன் நான்.

'ஆனால் ஒரு தொல்லை! பந்தைப் பிடிப்பவரும் மிக விரைந்து ஓடி பந்தைத் தடுத்து விடுவாரே!' என்று இடை வெட்டினாள் வசந்தி.

என்னுடைய அசட்டுத்தனத்தை மறைப்பதற்கு 'அதோ சூரியன் உதயமாவதுபோலத் தெரிகின்றதே' என்று கூறினேன்.

"சந்திர உலகில் சூரியன் தோன்றியதும் வெப்பநிலை மிகவும் அதிகரிக்கும். கொதிக்கும் நீரின் வெப்பநிலையை விரைவில் எட்டிவிடும்! அதுபோன்று சூரியன் மறைந்தபின் குளிர் மிக அதிகமாகும். சுவாசிக்கும் காற்று திரவமாக மாறிவிடும்! அவ்வளவு குளிர்!' என்றான் பாஸ்கரன்.

'இத்தகைய உலகத்தில் இருப்பதை யாரும் விரும்ப மாட்டார்களே! எங்கு பார்த்தாலு

மும் பரவிவிட்டது. இதன்மேல் சூரிய ஒளி படும்போது இது ஒளியுடையதாகத் தெரிகின்றது.'

'ஓகோ இந்தச் சாம்பல்தான் சந்திரனின் ஒளிக்குக் காரணமா? சரி, அந்த எரிமலைகளைப் பார்ப்போமா?'

'தாராளமாய்ப் பார்க்கலாம். அதோ தெரிகின்றதே உயரமான சுவர்போன்ற மலை. அதன் மீது ஏறுவது கஷ்டமில்லை. சந்திர உலகில்தான் வெகு உயரத்திற்கு எழும்பலாமே!' என்றான் பாஸ்கரன்.

நாங்கள் முழு முயற்சியுடன் மேலே எழும்பினோம். அந்த மலையுச்சி ஒரே கூராக இருக்கவில்லை. சமதரையைப் போன்று இருந்தது. நாற்புறமும் பார்த்தபோது ஒரு கோட்டையின் சுவரைப்போன்று காணப்பட்டது. வளைவின் நடுவே ஒரு பள்ளம் இருந்தது. 'இது என்ன புதுமாதிரியான எரிமலையாக இருக்கின்றதே?' என்று வசந்தி வியந்தாள்.

'இவை ஒருகாலத்தில் எரிமலைகளாக இருந்தன. இன்று

கஸ், பிளேட்டோ போன்ற அறிவாளிகளினது பெயரைச் சூட்டியுள்ளனர்' என்று உஷா விளக்கந் தந்தாள்.

'மதிமுகம்' என்று பெண்கள் முகத்தைக் கவிஞர்கள் வருணிப்பது எவ்வளவு பொருத்தமென இப்போது விளங்குகிறதல்லவா?" என்று கூறிவிட்டு என்னைப்பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான் பாஸ்கரன்.

உஷாவும் வசந்தியும் அவனைச் சுட்டெரித்து விடுவதுபோலப் பார்த்தனர்.

'தூரத்தில் ஒரு கரும்பகுதி தெரிகின்றதல்லவா? அது எரிமலைகளினின்று வெளிப்பட்ட கந்தகக் குழம்பு இறுகியதால் ஏற்பட்ட சமுத்திரை. பூமியிலிருந்து பார்க்கும்போது அப்பகுதி இருண்டு காணப்படும். சூரிய ஒளியைப் பிரதிபலிக்கக்கூடிய சாம்பல் அங்கு இல்லை. இப்பகுதிகளின் உருவம்தான், பூமியில் இருப்போர்க்கு ஔவைக்கிழவியாகவும், முயல் போன்றும் தோன்றுகின்றது" என்று கூறிய பாஸ்கரன் 'சரி, எல்லாரும் வாருங்கள்! பூமிக்குத் திரும்பிச்

செல்வோம்!' என்று அழைத்தான்.

எல்லோரும் விமானத்தில் ஏறி அமர்ந்தோம். விமானம் பூமியை நோக்கி விரைந்தது. திரும்பிப் போகும்போது என்னுடைய கடைசிச் சந்தேகத்தையும் கேட்டேன். 'சந்திரன் எப்படித் தோன்றியது? அதன் முடிவு என்னவாகும்?'

சிரித்துக்கொண்டே உஷா மறுமொழி சொல்லத் தொடங்கினாள். '200 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் மேற்புறம் இளகிய நிலையில் இருந்தது. அப்போது பூமி வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது. இப்போது சுற்றும் வேகத்தைப் போல 6 அல்லது 7 மடங்கு வேகத்துடன் சுற்றிக்கொண்டிருந்தது. அவ்வேகத்தில் சுழன்றுகொண்டிருந்த பூமியினின்று ஒரு பகுதி பிரிந்து அகன்றது. மேற்புறம் இளகிய நிலையில் இருந்த காரணத்தால் பிரிந்த இப்பகுதி நாளடைவில் குளிர்ந்து இறுகிச் சந்திரனாகமாறியது. பூமியின் சுழற்சியில் தானும் பங்கு கொண்டு, தானும்பூமியை வலம் வந்துகொண்டிருக்கிறது. எனவே சந்திரனைப் பூமியின் குழந்தையென்று கூறினால் அதில் தவறு ஒன்றுமில்லை. இனிச் சந்திரனின் முடிவைப் பார்ப்போம். சந்திரன் பூமியைச் சுற்றும்போது தன் கவர்ச்சியினால் தன் தாயின் வேகத்தை சிறிதுசிறிதாகக் குறைத்து வருகின்றது. இந்த வேகக் குறைவு நெடுங்காலஞ் சென்ற பின்பே நன்கு புலப்படும். இதனால் பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ளும் காலம்— அதாவது ஒருநாள்—மிகும். கடைசியில் பூமியின் ஒருநாள் இன்றைய நாட்களைப்போல 45 நாட்களாகிவிடும். அப்போது சந்திரனும் 45 நாட்களில் ஒருமுறை பூமியைச் சுற்றி வரும். அப்போது பூமியில் ஒரு இடத்தினின்று பார்க்கும்போது சந்திரன் ஒரே நிலையான இடத்தில் இருப்பதாகத்தோன்றும். இந்நிலையில் சந்திரன் பூமியின் கவர்ச்சிக் குட்பட்டுப் பூமியைநெருங்கும். கடைசியில் பூமியுடன் மோதி பல துகள்களாகச் சிதறிவிடும். இது ஒரு சிலரின் கருத்து. ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் பலகோடி ஆண்டுகள் கழிந்த பின்பே நிகழலாம். எனவே அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்!'

'டபார்!' என்று விமானம் வெடித்ததும் 'ஐயோ!' என்று அலறிக்கொண்டு எல்லாரும் மூர்ச்சையானோம்.

* *

"என்ன இது பட்டப்பகலில் நல்ல நித்திரை.........அதுவும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே.........' என்றாள் என் அன்புக் காதலி வசந்தி.

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். ஆம், வசந்திதான்!

"இங்கிலாந்திலிருந்து வரும் பாஸ்கரனையும் உஷாவையும் வரவேற்க விமான நிலையத்திற்கு வரவில்லையா?' என்றாள்.

'இதோ ஒரு நிமிஷத்தில் வெளிக்கிட்டுக்கொண்டு வந்து விடுகிறேன்' என்று கூறியபடியே எழுந்தேன்.

அப்போது எனது மடியிலிருந்து புத்தகம் கீழே விழுந்தது. வசந்தி அதனைக் குனிந்து எடுத்தாள். அதில் 'வானவெளிப் பயணம்' என்று எழுதியிருந்தது!

## நீதிமன்றத்தில்—

### லலிதா பத்மினிக்கு அபராதம்!

உட நீரியெல்ல என்னுமிடத்தில் உள்ள நீரியெல்ல வித்தியாலயத்தைச் சேர்ந்த லலிதா பத்மினி நவுலா என்ற ஆசிரியை, அதே பாடசாலையில் பயிலும் ஏ. குணவர்தன என்ற மாணவனைப் பிரம்பால் அடித்துக் காயப்படுத்தியதற்காக, இரத்தினபுரி மாஜிஸ்திரேட் திரு. கே. ஏ. பி. ரணசிங்க, அந்த ஆசிரியை புற்றுநோய்ச் சங்கத்திற்கு பத்து ரூபா செலுத்த வேண்டுமென்று தண்டனை விதித்தார்!

### தந்தையைத் தாக்கிய தனையன்,

புலோலி தெற்கைச் சேர்ந்தவயிரவன் கணபதி என்பவரை அவரது மகனை கணபதி கிருஷ்ணபிள்ளை என்பவர் தடியால் தாக்கிக் காயம் உண்டு பண்ணியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம், தந்தையைத் தாக்கிய தனையனுக்கு ரூபா 75 அபராதம் விதித்தார்!

### வழக்கறிஞருக்கு விவாகரத்து அனுமதி!

மாஜி இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கொலை வழக்கு விசாரணையில் எதிரிகளின் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவரான, பிரபல சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர் திரு. சென்யா, தமது மனைவி திருமதி எரின் சென்யா விடமிருந்து விவாகரத்துக் கோரி, கொழும்பு கூட்டு மாவட்டக் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த மனுவை, நீதிபதி திரு. வி. டி. பண்டித குணவர்த்தன ஏற்றுக் கொண்டு, விவாகரத்துக்கு அனுமதியளித்துள்ளார்!

### கஞ்சாவும், அபினும், கள்ளச் சாராயமும்!

யாழ்ப்பணத்தில் உள்ள ஒரு தேநீர்க் கடையின் சொந்தக்காரரான, பி. முகம்மது சாஹிட் என்பவர் கஞ்சாவும், அபினும் வைத்திருந்ததைக் கண்டு பிடித்த போலிசார் அவரைக் கைது செய்தனர். நீதிபதி, சாஹிடை ரூபா 5000 பிணையில் விடுதலை செய்திருக்கிறார்.

அதேநேரத்தில் மற்றொரு நபரும் நீதிபதிக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். கள்ளத்தனமாகச் சாராயம் விற்ற குற்றம் அவர்மேல் சுமத்தப் பட்டிருந்தது.

## ஆளில்லாமல் தானே சலவை செய்யும்

# அதிசய இயந்திரம்!

### அமெரிக்காவில் இருக்கிறது!

அழுக்குத் துணிகளை இயந்திரங்களே வெளுக்கின்றன; சலவை செய்கின்றன; உலர்த்தியும் விடுகின்றன! சலவை செய்வதற்கு இருபத்தைந்து காசு; உலர்த்துவதற்குப் பதினைந்து காசு. அவ்வளவுதான். சுலபமாகவும், சிக்கனமாகவும் வேலை முடிந்து விடுகிறது!

அமெரிக்காவில் சுமார் 12,000 தானே இயங்கும் சலவைக் கூடங்கள் இருக்கின்றன. சலவை செய்யும் இயந்திரங்கள் கொண்ட ஒரு சலவைக் கூடம் அமைக்க, சுமார் 7000 டாலர் செலவாகின்றது. ஆனுல் இது நல்ல வருமானம் தரும் தொழிலாகக் கருதப்படுகிறது.

பள்ளி ஆசிரியர்கள், டாக்டர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், குடும்பப் பெண்கள் முதலியோர் இத்தகைய சலவைக் கூடம் ஒன்றை அமைத்துக் கொண்டு, ஓய்வு நேரங்களில் நிறையச் சம்பாதிக்கின்றனர். அமெரிக்காவில் இருக்கும் இம்மாதிரிச் சலவைக் கூடங்களில் தொண்ணூறு சதவிகிதம் மேலே கூறப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன.

பெரிய ஹோட்டல்கள், கல்லூரி ஹாஸ்டல்கள் முதலியவற்றில், தானே இயங்கும் சலவைக் கூடங்கள் உள்ளன.

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்ருல், சலவை செய்வதற்கான கட்டணத்தையும் அந்த இயந்திரங்களே வசூலித்து விடுகின்றன! கட்டணத்திற்குரிய நாணயம் போடாவிட்டால் இயந்திரம் இயங்காது!

அழுக்குத் துணியை, வெளுக்கும்இயந்திரத்திற்குள் போட்டுவிட்டு அதை வெளுப்பதற்கான கட்டணத்தை ஐந்து காசுகளிலிருந்து, முப்பத்தைந்துகாசுகள்வரை—அதற்குரிய இடத்தில்போட வேண்டும். உடனே சலவை இயந்திரம் இயங்கத் தொடங்கும். தண்ணீரை யாரும் நிரப்பிவிட வேண்டும் என்ற கட்டாயமில்லை. தானே தண்ணீரை நிரப்பிக் கொள்கிறது, துவைக்கிறது, அலசுகிறது, பிழிகிறது, கடைசியில் உலர்த்தியும் விடுகிறது!

கட்டணத்திற்காகப் போடப்படும் நாணயங்கள் உள்ளே ஒரு பெட்டியில் சேர்க்கப் படுகின்றன. இந்தப் பெட்டியை இரும்புக் கதவுகள் பாதுகாக்கின்றன. சாவி இல்லாமல் இந்தப்பெட்டியை உள்ளிருந்துகூட அகற்ற முடியாது. அவ்வளவு பந்தோபஸ்து. இந்தச் சலவைக் கூடத்தை இயக்குவதற்கு ஆள் யாரும் வேண்டியதில்லை!

## மிருகங்களைப் புதைப்பதற்கு

# மிகப் பெரிய கல்லறை!

### பிரிட்டனில் இருக்கிறது!

வீடுகளில் பிரியத்துடன் வளர்க்கப்படும் மிருகங்களும், பிராணிகளும் இறந்து விட்டால், அதனைப் புதைப்பதற்கென்று பிரிட்டனில் பிரமாண்டமான கல்லறை ஒன்று இருக்கிறது!

பிரிட்டனிலுள்ள இல்போர்ட் என்னுமிடத்தில் இருக்கும் இக்கல்லறையை டபிள்யூ. ஹர்ஸ்ட் என்பவர் கண்காணித்து வருகிருர்.

இந்தக் கல்லறையில் எலி, பூனை முதலிய பிராணிகளும், குதிரை, நாய் முதலிய மிருகங்களும் புதைக்கப்பட்டுள்ளன. வீடுகளில் பிரியமுடன் வளர்கப்படும் 'செல்ல' மிருகங்கள் இயற்கையாகவோ, அல்லது விபத்துக்குள்ளாகியோ இறந்துவிட்டால், அந்த மிருகத்தின்—அல்லது பிராணியின் உடலை, அந்தக் கல்லறையில்தான் புதைக்கிருர்கள். கல்லறையின் மேல் சலவைக் கல்லைப்பதித்து, அதில் தாங்கள் அந்தப் பிராணியின் மேல் செலுத்திவந்த அன்பை 'இரத்தினச் சுருக்கமாக' எழுதுவிக்கிருர்கள்!

கல்லறைக்கு அடிக்கடி வருகை தந்து, மலர் வளையங்களை வைத்துக் கல்லறையை அலங்கரிப்போரும் உண்டு.

ஒருசமயம் இல்போர்டில் வசித்துவந்த கனடிய மாது ஒருத்தி, தன் நாய் இறந்த பின்னர் அதை இல்போர்டிலுள்ள கல்லறையில் அடக்கம் செய்தாளாம். தற்போது அயலூரில் வசித்து வரும் அந்தப் பெண், தன் நாயின் இறந்த தினத்தை நினைவுகூர்ந்து, ஒரு மலர்வளையம் வாங்கி வைக்குமாறு இல்போர்ட்மேயருக்குப் பணம் அனுப்பிவைத்தாளாம்!

"மிருகங்களையும், பிராணிகளையும் அடக்கம் செய்வதற்கு மதச் சடங்குகளொன்றும் அனுசரிக்கப் படுவதில்லை. ஆனுல், அரசாங்கத்துக்குச் சேவை செய்யும் போலிஸ் நாய், குதிரை போன்றவைகள் இறந்து விட்டால், அவைகளை ராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்கின்றனர்" என்று அந்தக்கல்லறையைக் கண்காணித்து வரும் திரு. ஹர்ஸ்ட் கூறினுர்.

வசந்த காலத்தில், இந்தக் கல்லறையில் வளர்க்கப்படும் பூமரங்கள் பூத்துக் குலுங்குவது கண்ணுக்கு ரம்யமான காட்சியாக இருக்கும். இந்த இடத்தில் ஆண்களும், பெண்களும் மணிக்கணக்காக மௌனமாகஅமர்ந்திருந்து. இந்த அழகுக்காட்சியை ரசித்துக்கொண்டிருப்பார்களாம்!

# வெள்ளைக்கார சினிமா 'விசரி'கள்!

நம் ஊர்களில் இப்பொழுதெல்லாம் சினிமா 'விசிறி' கள் சங்கங்கள் மூலைக்கு மூலைஉதயமாகிக்கொண்டிருக்கின்றனஅல்லவா? இதற்கெல்லாம் சினிமா 'விசர்' (பைத்தியம்) தானே காரணம்? "ஜெமினி அப்படி நடிக்கிருர், சிவாஜி இப்படி வசனம் பேசுகிருர், எம். ஜி. ஆர். இப்படிச் சண்டை பிடிக்கிருர், சாவித்திரி இப்படி அழுகிருர், சரோஜா தேவி இப்படிக் குதிக்கிருர்" என்றெல்லாம் சதா புலம்பிக் கொண்டிருக்கும் ஆண்களும் பெண்களும் ஏராளம்!

இது மட்டுமா? தாங்கள் பிறந்த திகதி, மாதம், வருடம் முதலியவற்றைத்

## 'விசரர்'களும் இருக்கிருர்கள்!

தெரிந்துகொள்ளாத பலபேர், சினிமா நட்சத்திரங்களின் பிறந்ததினங்களை உருப்போட்டு வைத்திருக்கின்றனர்!

இப்படியான ஆசாமிகள் நம் ஊரில் மட்டும்தான் இருப்பதாக நாம் தப்புக்கணக்குப் போட்டு விடக் கூடாது! இன்னும் கூடிய சீக்கிரத்தில் மேனுட்டு 'விசரி' களும் 'விசரர்'களும் நம் ஊர்க்காரர்களைத் தோற்கடித்து விடுவார்கள்போலிருக்கிறது!

'ஸினி பேன்ஸ் அஸோஸியேஷன்' என்ற ஒரு சங்கத்தை அவர்கள் ஆரம்பித்திருக்கிருர்கள். கலைவிஷயத்தில் ஆர்வமுள்ள யாரும் அதில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளலாம். வயதுக் கட்டுப்பாடுகிடையாது.

நாற்பத்தேழு வயதான ஜோர்ஜ் பவுலர் என்பவர் தான் இதன் தலைவர். இதுவரை இந்தச் சங்கத்தில் பல்லாயிரக் கணக்கான அங்கத்தவர்கள் சேர்ந்திருக்கிருர்களாம்!

இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கம் என்ன தெரியுமா? 'எல்லா நடிக, நடிகைகளையும் சமமாகப் போற்ற வேண்டும்' என்பது தானும்!

எப்படியிருக்கிறது விந்தை! நம் ஊர்களில் சிவாஜியா எம். ஜி, ஆரா? உயந்தவர்கள்? என்ற விஷயத்திலேயே விவாதமிட்டுப் பொன்னுன காலத்தைப் பழுதாக்கும் உள்ளூர் 'விசரர்களுக்கும், விசரிகளுக்கும்' ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

வெள்ளைக்காரர்கள் இந்தச் சங்கத்தை ஆரம்பித்தபிறகு, அங்குள்ள நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும் பெரும் தொல்லையாக இருக்கிறதாம். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்பே 'விசரர், விசரி' கள் டெலிபோனில் நடிகர், நடிகைகளுக்குத் தங்கள் காலை வணக்கத்தைக் கூற ஆரம்பித்து விடுவார்களாம்.

"இப்படியான தொல்லையை மட்டும் இந்தச் சங்கம் நீக்குவதற்கு வழி செய்தால், நானும் கூட இந்தச் சங்கத்தில் ஒரு அங்கத்தவளாகச் சேர்ந்துகொள்வேன்" என்று, பிரபல இத்தாலிய சினிமா நட்சத்திரமான ஜினு லா லோ லோ கூறியுள்ளார்!


## ஐந்தாம் வகுப்புக்கு

### 3-ம் தவணைக்கு உபயோகமான பயிற்சி நூல்கள்

வினுப்பத்திரங்கள் — தமிழ்பாஷை — சதம் 60
வினுப்பத்திரங்கள் — கணிதம் — சதம் 60
வினுப்பத்திரங்கள் — சூழல் — சதம் 60
வினுப்பத்திரங்கள் — ஆங்கிலம் — சதம் 60

ஷ நூல்களை எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)
சைவபாடப் பயிற்சி V — சதம் 90

எழுதியவர்: சைவப் புலவர் இ. செல்லத்துரை

விற்பனையாளர்:


ஆனந்தா அச்சகம் — புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

களனி நதிதீரத்திலே (6)

# இரண்டு மலர்களும், ஒரு வண்டும்!

"ஈழத்துச் சோமு"



அவள் குழந்தைபோல மெய்மறந்து சுழல் ராட்டினத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் எனக்கு ஒரே உற்சாகமாகிவிட்டது!

"நாமும் பறப்போமே!"—அவள் கையை இழுத்துக்கொண்டுபோய் சுழல் வண்டியில் இருத்தி அருகில் உட்கார்ந்துகொண்டேன். சுழல் இராட்டினம் எம்பி உயர்ந்தது, அவள் என்னை இறுக்கி அணைத்துக்கொண்டாள்.

"கிர்... கிர்... ..கிர்......."

நாங்கள் உல்லாசமாகப் பறந்துகொண்டிருந்தோம். சொர்க்கத்தில் நாம் நீந்தி வருவதுபோல...... சுந்தர உலகில் பவனி வருவதுபோல......!

சுழல் வண்டி ஒருமுறை தாழ்ந்து எம்பியது. "ஐயோ!"— என்னுடனிருந்த றோசி பிடி தவறி விழுந்துவிட்டாள்! ஐயோ!

"றோசி!........ றோசி... ! றோ... .!"

நான் செய்வதின்னதென்று தெரியாமல் பிரமித்துப் போகிறேன்.

* * *

"என்னடா மேனை பகலிலை கூட வாய் பிதற்றுகிறாய்? ஏதும் கனவு கண்டியோ?" எனது அன்னை அருகிலிருந்து விசாரித்தா.

எனக்கு ஒரு புறம் திகைப்பாகவும் கூச்சமாகவும் இருந்தது. திரும்பிப்பார்த்தேன். அயல்வீட்டுத் தங்கம்மாப் பாட்டியும் அம்மாவுடன் கூட இருந்து கதைத்துக்கொண்டிருந்தா.

நான் படுக்கையிலிருந்து எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டேன். புத்தகமொன்றை எடுத்துப் படிக்கத் துவங்கினேன்.

மனம் திக் திக் என அடித்துக்கொண்டு அமைதியில்லாமலிருந்தது.

அன்று மாலைபோல தேநீரை அருந்திவிட்டு, சாய்வு நாற்காலியில் படுத்தபடி, புத்தகத்தை எடுத்து, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தேன்.

"அண்ணா...! அண்ணா...!" என கத்திக்கொண்டு லீலா ஓடி வந்தாள். லீலா எங்கள் அயல் வீட்டுச் சிறுமி. தங்கம்மாப் பாட்டியின் இளைய பேத்தி.

நான் ஊருக்குவந்துவிட்டால் "கொழும்பண்ணா... கொழும்பண்ணா" என எனக்குப் பின்னாலேயே சுற்றிக்கொண்டு திரிவாள். எனக்கும் அவள்மீது பிடிப்பு.

"கொழும்பண்ணா! உங்களுக்கு ஒரு சாமான்கொண்டுவந்திருக்கிறேன். என்ன எண்டு சொல்லுங்கோ பாப்பம்"—அவள் இரண்டு கைகளாலும் பொத்தியபடி எதையோ மறைத்து வைத்துக்கொண்டு காதில் தொங்கட்டான் ஆடக்கேட்டாள்.

நான் தோல்வியை ஒப்புக்கொண்டு அவளையே என்ன என்று சொல்லும்படி கேட்டேன். அவள் எனது மடியில் வந்து உட்கார்ந்துகொண்டு முகத்துக்கருகில் தன் கையைக் கொண்டுவந்துவிரித்தாள்.

'கும்' என்றது - ரோஜாவின் வாசனை!

அவள் தாமரைக் கரங்களில் இலேசாக மொட்டவிழ்ந்த மூன்று சிவந்த ரோஜா மலர்கள் கிடந்தன!

"என்ன? எங்கிருந்து...?" நான் வியப்புடன் கேட்டேன்.

"உங்களுக்குத்தான். அக்கா தந்துவிட்டவ"

"எனக்கா! அக்காவா..?" மேலும் வியப்புடன் கேட்டேன்.

"மத்தியானம் றோசாப்பூ வேண்டுமெண்டு கனவு கண்டு கத்தினியளாம். பாட்டி வந்து சொன்னா. அக்கா கேட்டுக்கொண்டிருந்துவிட்டு ஆய்ஞ்சு தந்தா. உங்களிட்டை குடுக்கட்டாம்." லீலா திக்கி திக்கி நெளிப்போடு கண்களை ஆட்டிக்கொண்டு சொன்னாள்.

நானோ சிரித்துக் கொண்டே அந்த மலர்களை வாங்கி மேசையில் வைத்தேன். அந்த ரோஜா மலர்கள் என்னையே பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தன.

* *

இரண்டு காரணங்களால் நான் மேலும் ஊரில் தங்கியிருக்க விரும்பவில்லை. எனக்கு உரிய லீவு முடிவடைந்து விட்டது ஒன்று. மற்றது றோசியின் நினைவு—'அவள் எப்படியிருப்பாள்? என்ன செய்துகொண்டிருப்பாள்?' என்ற தவிப்பு உள்ளத்தில் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது.

கொழும்புக்குப் புறப்படவேண்டும்' என்பதையறிந்தவுடனேயே அம்மா பரிவோடு என்னை எச்சரிக்கத் துவங்கிவிட்டா. "மேனை; உடம்பை ஒழுங்காகத் தேற்றிக்கொண்டு இன்னும் ஒரு கிழமை கழித்துப் போகலாம்" என்று.

வைத்தியப் பத்திரம் அனுப்பி மேலும் ஒருவாரம் நீடித்துக்கொள்வது அத்தனை சிரமமில்லை. அதுவும் புண்ணியவாட்டியின் அரசாங்கம் ஆயுள் வேத வைத்தியர்கள் கொடுக்கிற 'சேட்டிபிக்கேற்றை' அனுமதிக்கத் தொடங்கிய பின்பு, வரிசையில் நோயாளிகள் நிற்கவேண்டியதற்குப் பதிலாக, ஐம்பது சதம் வாங்கிக்கொண்டு நடைபாதையில் வைத்தே 'மெடிக்கல் சேர்ட்டிபிகேற்' வழங்குவதற்கு வரிசையாக எத்தனை வைத்தியர்கள்இன்று காத்துக் கிடக்கிறார்கள்? எங்களூர் கந்தையாப் பரியாரியார் இப்படியில்லாவிட்டாலும், எனக்குத் தேவையென்றால் தயங்காமல் ஒரு பத்திரம் எழுதித்தந்துவிடுவார். ஆனாலும் தொடர்ந்து நிற்க நான் விரும்பவில்லை.- அந்தப்பயங்கரக் கனவுக்குப்பிறகு. மனம் பதறிக்கொண்டு றோசியை விரைவில் காணவேண்டுமென அங்கலாய்த்தது.

'கந்தோரில் வேலைகள் குவிந்து கிடக்கும், இம்முறை போய் இரண்டு மூன்று கிழமைகளில் திரும்ப வருகிறேன்' என ஒரே பிடியாக அம்மாவிடம் சாட்டுச் சொல்லி விட்டு நான் புறப்பட ஆயத்தமாகிவிட்டேன்.

அம்மா எனக்காகச் சேகரித்துத் தந்த முட்டை, எள்ளுருண்டை, திறம் நல்லெண்ணெய் முதலியவற்றைப்பத்திரமாகப் பார்சல் பண்ணி எடுத்துக்கொண்டு பயணஞ் சொல்லிவிட்டு நான் புறப்பட்டுவிட்டேன். நடராசனின் தாயும் ஒரு சிறு பார்சல் தந்திருந்தா, மகனிடம் கொடுக்கும்படி. நான் வீட்டிலிருந்து புறப்படும்போது எதிரே லீலா ஓடி வந்தாள். அவளையும் கையில் பிடித்துக் கூட்டிக்கொண்டு அவள் வீடுவரை போய்க்கொண்டிருந்தேன். அங்கே படலையில் தங்கம்மாப்பாட்டியும்நின்றா. பாட்டிக்கும் பயணம் சொல்லி விட்டு லீலாவைத் தூக்கிஎடுத்துமுத்தமிட்டேன்.

"கொழும்பண்ணா, மற்ற முறை நீ வருகிறபோது நீ நல்லாய்க் கொழுத்து வரவேணும் அல்லது 'டூ' தான் என்ன?" என்றாள் அவள் தன் சிறிய விழிகளை ஆட்டியபடி.

அவளை இறக்கி விட்டு, அவள் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு நான் திரும்புகிறபொழுது—

ஒரு சோடி மான் விழிகள், கிடுகு வேலியைக் கிழித்து அதனூடாக என்னையே பார்த்தபடி இருந்தன! நான் இதை அவதானித்து விட்டேன்! என் கண்கள் சந்தித்தவுடன் அந்த விழிகளில் தான் எத்தனை நாணம்!

நெல்லியடிச் சந்தியில் 'மெயில் பஸ்' ஸைப்பிடித்து, நான் நேரத்துக்கு புகை வண்டி நிலையத்துக்குப் போய் விட்டேன்.

புகைவண்டியில் வழமைப்பிரகாரம் ஒரே கூட்டம். காங்கேசன் துறைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் ஓடும் இந்தப் புகை வண்டி கடந்த பிறவியில் ஒரு மலைப்பாம்பாகத்தானிருக்க வேண்டும்! அந்த மலைப்பாம்பின் அதீத ஆசை பெரிய மானையோ மரையையோ விழுங்கி விட்டு உடலுக்குள் அடக்கிக்கொள்ள முடியாமல், முட்டிப் பொருமிக்கொண்டு நெழியுமே—அதே போலத்தான் இந்ப் புகை வண்டியும்! என்ன பேராசைத்தனம்! நிர்வாகிகள் பிரயாணிகளின் அசௌகரியத்தை நீக்க இன்னும் பெட்டிகளைக் கூட்டினால் நஷ்டமாவந்துவிடப்போகிறது?

நல்ல காலம்; நடராசன் நேரத்தோடு எனது அலுவலகத்தில் 'றெயில்வே வாறண்டை, எடுத்து படுக்கை வசதியுள்ளதாக பதிவு செய்து, பிரயாணச்சீட்டை அனுப்பியிருந்தான்.

புகையிரதம் ஆனையிறவைத் தாண்டியதும் நான் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்து விட்டேன். உடனேயே உறக்கம் வரவில்லை—றோசியின் நினைப்புத்தான் வந்தது!

அவள் முகத்தில் ஆச்சரியம் திகழ, புருவங்கள் மேல் நோக்கி எழுந்து விரிய, கண்களில் மகிழ்வு பொங்க 'ஆ! நீங்களா! ...குணமாகி வந்துவிட்டீர்களா?' என மறுநாள் திடீரென என்னைக் கண்டதும் றோசி வியப்புடன் கேட்பாள். [11ம் பக்கம்பார்க்க]

# கண்டதும்... கேட்டதும்...

## ஆண்டவனுக்கே வெளிச்சம்!

அரசியல்வாதிகள் பாம்பைப் பழுதை என்பார்கள்; பழுதையைப் பாம்பென்பார்கள். பாமரமக்கள் அதை எல்லாம் நம்பித்தான் ஆகவேண்டுமா? வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைமை சாதாரண நிலைக்கு வந்துவிட்டதாகச் சென்றமாதம் நிதியமைச்சர் சொன்னார். ஆனால் சபைமுதல்வர், கடந்தவாரம் செனட்பிரதிநிதிகள் சபையில் பேசுகையில், கூட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவதற்கான முயற்சிகள் அவ்விரு மாகாணங்களிலும், குறிப்பாக வட மாகாணத்தில், நடைபெறுவதாகத் துப்பறியும் போலிசாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாயும், களவாகத் துண்டுப்பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்படுகின்றனவென்றும் இரகசியக் கூட்டங்கள் நடைபெறுகின்றனவென்றும் சொன்னார். இவ்விருவரில் எவர் கூறியது சரி என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

## பெண்கள் சோம்பேறிகளா?

"எவ்வித வேலையையும் செய்யமுடியாத சோம்பேறித் தனத்தால் இலங்கைப் பெண்களில் அதிகமானோர் வேலையில்லாதிருக்கிறார்கள்"

"சம்சாரியான உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சர் மகாநாமசமரவீரா மேற்கண்டவாறு கூறுவதானால், அவருக்கு எவ்வளவு தைரியமிருக்க வேண்டும்? மாதர்குலம் இந்த அபவாதத்தைச் சகித்துக்கொண்டிருக்கமுடியுமா?" என்று ஸ்ரீமதி மாதர்குலமாணிக்கம் கேட்கின்றார்!

அமைச்சரின் மேற்படி கூற்றை ஆட்சேபிக்குமுகமாக ஊர்வம்பு பேசும் இல்லக் கிழத்தியர் சங்கப் பொதுக் கூட்டமொன்று ஸ்ரீமதி மாதர்குல மாணிக்கத்தின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமையம் சங்கத் தலைவி பேசியதன் சாராம்சமாவது:-

"ஆண்கள் சோம்பேறிகளா அல்லது பெண்கள் சோம்பேறிகளா என்பதை அமைச்சர் சிந்தித்துப் பார்க்கட்டும். ஆண்கள் காலையில் எழுந்திருந்ததும் ஏதோ வெட்டி முறிக்கப் போகிறவர்களைப் போல இல்லாத ஆர்ப்பாட்டம் செய்து பெண்களை ஓடஓட விரட்டி வேலை வாங்கிவிட்டு, மூக்குமுட்டப் பலகாரம் சாப்பிட்டுவிட்டு, அவசர அவசரமாகப் பஸ்ஸிலும் ரயிலிலும் கந்தோருக்கு ஓடிப்போய் மேசையில் தூங்கி வழிகிறார்கள். அல்லது கன்டீனில் டீ குடித்தும் சிகரெட் புகைத்தும், அரட்டையடித்தும் வீண்பொழுது போக்குகின்றார்கள். மாலையில் வீடு திரும்புயபோது மனைவி காப்பியும் கையுமாக நில்லாது போனால் அவர்களுக்கு மூக்குக்குமேல் கோபம் வந்துவிடுகிறது. காப்பியைக் கொடுத்துவிட்டுப்படுக்கப் போகும்வரை ஹாயாக சீட்டு விளையாடுகிறார்கள். பெண்களோ சமையல்செய்து, சந்தைக் கடைக்குப்போய் சாமான்களும் காய்கறிகளும் வாங்கி, ஷாப்புக்குப்போய் பவுடரும் துணிமணியும் வாங்கி, பிள்ளைகளைக்குளிப்பாட்டி, கணவனுக்குபணிவிடைசெய்துபடாதபாடுபட்டுப்பதினெட்டும் செய்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள். ஆண்கள் சோம்பேறிகளா? இல்லை பெண்கள் தான் சோம்பேறிகளா?"

(கரகோஷம்)

அமைச்சரின் கூற்றை ஊர் வம்புபேசும் இல்லக் கிழத்தியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு, அவர் தாம் கூறியதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றதென்றும், தீர்மானத்தின் பிரதிகள் அமைச்சருக்கும் அவருடைய பாரியாருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம்கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேறிற்று.

## திறமைக்குப் பரிசும் வீரச்செயலுக்குப் பதக்கமும்!

"மணிமணியான கருத்துக்களும், செயற்றிறனுமுடைய இ. போ. ச. ஊழியர்களுக்கு "போனஸ்" பரிசுகள் வழங்கப்படுகின்றன—செய்தி

தனிப்பட்டவர்கள் பஸ் கொம்பனிகளை வைத்து நடத்தியபோது மணிமணியான கருத்துக்களும் செயல் திறனும் தேவைப்படவில்லை. ஏனெனில் பஸ் முதலாளிகளுக்கு மணிமணியான கருத்துக்களுக்குப் பஞ்சமிருக்கவில்லை. எத்தனை பரிசோதகர்களை நியமித்தாலும் பஸ் கொண்டக்டர்களும், டிரைவர்களும் சேர்ந்து பரிசோதகர்களின் கண்ணில் மண்ணைத் தூவிப் பிரயாணிகளின் பணத்தை முதலாளிகளிடம் போகவிடாது தடுத்து, தாமே பங்கு போட்டுக்கொண்டார்கள். ஆகவே முதலாளிகள் "போனஸ்" கொடுக்கவில்லை. கொடுக்கவேண்டியதேற்படவுமில்லை.

இப்பொழுது பஸ் சேவை, அரசாங்கத்தால் நடத்தப்படுவதால், இ. போ. ச. "போனஸ்" கொடுத்து பஸ் ஊழியர்களை காக்காய் பிடிக்காது போனால் அவர்கள் அரசாங்கத்துக்கே தொப்பி போட்டுவிடுவார்கள். ஆகவே அவர்களின் மணிமணியான கருத்துக்களுக்கும், செயற்றிறனுக்கும் உரிய மதிப்பு அளிக்கத்தானே வேண்டும்?

## பட்டங்களுக்குப் பஞ்சம்!

"வீரதீரச் செயல் புரிவோருக்கு வருடந்தோறும் பதக்கங்கள் வழங்கவேண்டுமென்று ஒரு எம். பி. பிரதமரைக் கேட்டிருக்கிறார்"—செய்தி

இலங்கை பிரிட்டிஷாரின் ஆட்சியிலிருந்த காலத்தில் இலங்கை மக்களுக்கு வருடமிருமுறை, அதாவது புதுவருடத்தினத்தன்றும், மன்னரின் பிறந்த தினத்தன்றும் — கௌரவப் பட்டங்கள் வாரிவழங்கப்பட்டன. இப்பொழுது அந்தப் பட்டங்களுக்கு "மவுசு" இல்லாமல் போச்சு. பட்டம் பெற்றவர்கள் கூட அவற்றை வெறுத்து ஒதுக்குகின்றார்கள். நாமே சொந்தத்தில் ஏதாவது பட்டம் கொடுக்கலாமென்றால் "வீரயா" "வீரன்", "வீமன்" ஆகியவற்றைத் தவிர்ந்த வேறு சுதேசமொழிப் பதக்கங்கள் கிடைப்பதரிதாயிருக்கின்றது.

ஆகவே, பதக்கம் வழங்கும் யோசனை வரவேற்கத்தக்கதே. பதக்கங்கள் வழங்கினால் குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் கிடைக்காத நேரத்தில் அவற்றை வைத்துக்கொண்டு விளையாடலாம்.

அரசாங்கத்துக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும்சமயத்தில் பதக்கங்களை வெங்கலத்தில் செய்ய நினைப்பது புத்தியல்ல. அசல் இரும்பில் அல்லது கெட்டிக் காகித அட்டையில் செய்தால் பணம் மிச்சப்படுவதோடு, பதக்கங்களும் தேய்ந்து மாய்ந்து போகாமல் இருக்கும்!

—மாயாவி

# தெரிந்ததா?

செல்வி. மலர் வதனி,
முகத்துவாரம்.

கே:- ஒரு ஆகாய விமானத்தின் வால், சக்கரங்கள் இதில் முதலில் தரையை விட்டுக் கிளம்புவது எது?

ப:- வால்தான்!

செ. மாணிக்கம், லுணுகலை.

கே:- சுவர்க்கம் எங்கே இருக்கிறது?

ப:- "தாயின் பாதத்தடியில்தான் சுவர்க்கம் அடங்கியிருக்கிறது" என்று முகம்மதுநபி (ஸல்) சொல்லியிருக்கிறார்!

ஜஸிந்தா டி. குரூஸ்,
மன்னார்.

கே:- கடந்தவாரம் புதினத்தில் "மக்கர் பண்ணும் மலையாள நடிகரை"ப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததே, யார் அந்த நடிகர்?

ப:- "ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே!" என்பது நம் தமிழ்ப் பழமொழி. ஊர், மலையாளமென்று 'காகா' ராதாகிருஷ்ணன் சொல்லிவிட்டார். பெயரை நீங்களே யூகித்துக்கொள்ள வேண்டியதுதானே!

எஸ். பி. ராஜநாயகம்,
வெள்ளவத்தை.

கே:- இலங்கை மாதப்பத்திரிகையின் இளம் ஆசிரியர் ஒருவர், தமிழ்வாணனுடன் படம்பிடித்துப் போட்டுக் கொண்டு, தமிழ்வாணன் தன் நண்பர் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறாரே?

ப:- தமிழ் வாணன் ஒரு 'பக்கா பிஸ்னஸ் மேன்' என்பதை அவர் மறந்துவிட்டார் போலிருக்கிறது! அண்மையில் மற்றொரு மாதப்பத்திரிகையில், அதைவிட இளம் ஆசிரியர் ஒருவர் தமிழ் வாணனுடன் படம் பிடித்துக் கொண்டு தம் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறாரே, நீங்கள் பார்க்கவில்லையா?

இரா. கிருஷ்ணன், கண்டி.

கே:- சிவாஜி கணேசன் கடவுளைக் கும்பிடுகிறாரா?

ப:- இந்த இதழ் சினிமா பகுதியைப் புரட்டிப் பாருங்கள்!

சிவம், கொழும்புத்துறை.

கே:- 'டொமினிக் ஜீவா'வின் சிறுகதைத் தொகுதிக்கு பரிசு கிடைக்கச் செய்வதற்காகச் சில குறிப்பிட்ட குழுக்கள் மந்திரிமாருக்கு வால் பிடித்தது உங்களுக்குத் தெரியாதா?

ப: இந்த மாதிரியாக இன்னும் பலர் கேட்டிருக்கிறார்கள். எல்லாருக்கும் எனது பதில் இதுதான். போட்டி முடிவுகள் சம்பந்தமாக இப்படித் தகராறுகள் கிளம்புவது வழக்கந்தான். கல்கியின் ஈழத்துச் சிறுகதைப் போட்டி முடிவு பற்றிய விவாதம் இன்னமும் முடிந்தபாடில்லை! டொமினிக் ஜீவாவுக்குப் பரிசு கிடைத்த விதத்தைப் பற்றி என்னால் அபிப்பிராயம் சொல்ல முடியாது. ஆனால் அவரும் பரிசு பெறக்கூடிய எழுத்தாளரே என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியும்! ஆகவே இந்தச் சமயத்தில் வீண் தகராறுகளைக் கிளப்பாமல் பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளரைப் பாராட்டுவதுதான் நல்லது. ஜீவாவுக்கு மட்டுமன்றி, எழுத்தாளர் உலகத்துக்கே அது நன்மை பயக்கும்!

ஜே. ஆர். பெஞ்சமின்,
கொழும்பு-4.

கே:- 'பாவ மன்னிப்பு' கதையை எழுதியது யார்?

ப:- ஜொஹாராபேகம் என்ற முஸ்லிம் பெண்மணி ஒருவர் எழுதிய கதை இது. ஆனந்த விகடனில், ஆர். பி. மல்லாரி என்ற பெயரோடு, "கடைசி வெள்ளிக்கிழமை" என்ற தலையங்கத்தில் இவர் எழுதிய இதே கதையை நான் படித்திருக்கிறேன்!

"கார்த்திகைக் கன்னி"
கோண்டாவில்.

கே:- உங்களுக்குப் பாடத் தெரியுமா?

ப:- உங்களுக்கு ஓடத் தெரியுமா?... எப்பொழுதுமே முன் ஜாக்கிரதையோடு இருப்பது நல்லதல்லவா?

எஸ். எம். ஜிப்ரி,
மட்டக்களப்பு.

கே:- டைரக்டர் பிரசாத் முன்பு என்னசெய்து கொண்டிருந்தார்?

ப:- இன்று புகழுடன் திகழும் டைரக்டரும், படத் தயாரிப்பாளருமான பிரசாத் ஒருகாலத்தில் சினிமா தியேட்டரில் 'கேட்கீப்பர்' வேலைபார்த்து வந்திருக்கிறார்!

—"மனோ"

## களனி நதி தீரத்திலே......

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

''ஆமாம் டார்லிங், உனது பிரார்த்தனையும் நினைவும் என்னைக் குணப்படுத்திவிட்டன. எல்லாம் இந்த ரோசியின் சக்திதான்'' —நான் அவள் கன்னத்தில் தட்டுகிறேன்.

அவள் குழந்தையாக மாறி என் தலையை வருடிக்கொண்டே சொல்லுவாள் 'எனக்கு உங்களை மிகவும் பிடித்திருக்கிறது...... எனக்குப் பிடித்தமானவர் நீங்கள் தான்!''

திடீரென எனக்குக் கோபம்! — ஆமாம் கோபம் வந்து விட்டதுபோல நடிக்கிறேன்.

''என் மீது அத்தனை அக்கறையிருந்தால் இத்தனை நாள் என்னைப்பார்க்காமலிருந்து விட்டாயே? நான் கணை தொடுக்கிறேன்.

ஒரு கணத்தில் ரோசி கலங்கிப் போய் விடுகிறாள். அவள் முகத்திலிருந்த மலர்ச்சியும் பூரிப்பும் கலைந்து, பதிலாக கண்ணீர் இலேசாகத் துளிர்ந்து விடுகின்றது!

''சீ.........சீச்சீ .... அழுவதா? என் ரோசியல்லவா? அழக்கூடாது.'' நான் அவள் விழி நீரைத்துடைக்கிறேன்.

அவள் விம்மி விம்மிச் சொல்லுகிறாள்.

''ஒரு கணம் கூட நிம்மதியாக இருக்கவில்லை, நான் பெண் தானே? உங்களூருக்கு எப்படி ஓடி வருவது? பதறிப் போய்த்தானே கடிதம் போட்டிருந்தேன். நீங்கள் தானே பதில் போடவில்லை?''

'ஓமோம் ரோசி; உன் கடிதம் தான் என்னைக் குணமாக்கி விட்ட மருந்து... .....'' நீகுணக்குன்று, நான் தமாஷாகத்தான் கோபித்தேன்......நிஜமாக அல்ல......

அவள் முகம் விரிந்து மலர்கிறது. அவள் புன்னகைக்கிறாள்.........

''சிரி ரோசி;..... நல்லாக சிரி ரோசி.........''

அவள் சிரிக்கிறாள் ...... முத்துப்பற்கள் அத்தனையும் ஒளிரச் சிரிக்கிறாள்... அவள் முகம் சிரித்தபடியே இருக்கிறது.

அந்த முகம் என்னிலிருந்து தொலைவாகப் போய்க்கொண்டிருக்கிறது சிரித்தபடி. இலேசாக மங்கலாகி மறைகிறது. நான் பார்த்தபடியேயிருக்கிறேன்... திடீரென்று அந்த முகம் மறைந்த இடத்திலிருந்து ஒரு புதுரோஜாமலர் தோன்றுகிறது!

அப்போது தான் விந்ரித்து போன்ற வனப்பு—முறுக்காக இதழ்களிருக்கின்றன. மகரந்தத்திலிருந்து 'கும்' மென ஒரே நறுமணம் வீசுகிறது! அந்த ரோஜாவில் இரண்டு விழிகள் தெரிகின்றன! —ஆமாம்; அந்த விழிகளை எங்கோ கண்டதாக ஞாபகம்?

என் மூளையைக் குடைந்து கொண்டேன்.

அந்த விழிகள் லீலா வீட்டில் கிடுகுவேலிக்கூடாக என்னை நோக்கிய விழிகள் தான்!— அந்த விழிகளின் சொந்தக்காரி லீலாவின் அக்காவா? அவள் எப்படியிருப்பாள்?

அந்த ரோஜா மலரில் ஒரு அழகு முகம் தெரிகிறது. நேர் வகிடு கிழித்து இரட்டைப் பின்னல்கள்; நாலாம் பிறை போன்ற நெற்றி; நடுவிலே சாந்து; இரண்டு மீன் விழிகள்; அவற்றுக்கு கீழே மாதுழம் பழம் போன்ற கன்னங்கள்; எடுப்பான மூக்கு; பவழ வாய்;— அந்த விழிகளிலும் லீலாவின் துருதுருப்புத்தனம் தெரிகிறதே!

இலேசாக அந்தப்பவள இதழ்கள் விரிந்து புன்னகைக்கின்றன; தலையைத்தாழ்த்தியபடி!

'அனுராதபுரம்... அனுராதபுரம..............''

''புளத்திரி..... புளத்திரி! ...........தம்பிலி..... தம்பிலி......தம்பிலி....... !

வெவ்வேறு குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. தலையை நிமிர்த்திப் பார்த்தேன். ஆட்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள்.

எனக்குப் பக்கத்தில் ரோசியையும் காணவில்லை —அந்தப் புதிய ரோஜா அழகியையும் காணவில்லை! பாதிராத்திரியாகியும் இன்னமும் உறங்காமல் நினைவு உலகில் சஞ்சரித்து விட்டேன்!

எனது பெட்டி விளக்கை அணைத்துவிட்டுத் திரும்பிப் படுத்து விட்டேன்.

அதிகாலையில் நான் பாலத்துறையிலுள்ள எங்கள் வீட்டுக்குப்போன பொழுது நடராசன் அறையில் நித்திரையாகக் கிடந்தான்.

ஆனல் ரோசி அதே அறையில் விழித்தபடி இருந்தாள்!

எனக்கு வியப்பும் திகைப்புமாக இருந்தது!

(தொடரும்)

## பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் முகத்தினுள் பாய்ந்த குண்டு இருமிய பொழுது கீழே விழுந்தது!

1944-ஆம் ஆண்டு யுத்தத்தின்போது சிகில் பால்ஸ் என்ற இராணுவ வீரர், ஜெர்மன் சிப்பாய் ஒருவனின் துப்பாக்கியால் தாக்கப்பட்டார். சிகில் பால்ஸ் இராணுவ ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டபோது, டாக்டர்கள் பரிசோதனைசெய்து பார்த்ததில், துப்பாக்கி ரவை ஒன்று பால்ஸின் தலைக்குள் இருப்பது தெரிய வந்தது. அதை அப்புறப்படுத்துவதற்கு டாக்டர்கள் முயன்றபோது பால்ஸ் தடுத்தார். மூக்கின் உட்புறத்திலிருக்கும் அந்தக் குண்டு ஒருவேளை டாக்டர்களின் சிகிச்சையினுல் மூளையைத்தாக்கிவிடுமோ என்று பயந்தார் சிகில். எனவே சத்திர சிகிச்சை செய்ய வேண்டாமென்று தடுத்துவிட்டார்.

அண்மையில் -அதாவது, இந்தச் சம்பவம் நடைபெற்ற பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின், ஒருநாள் சிகில் லொறி ஒன்றை ஓட்டிக்கொண்டு சென்ருர். மேடும் பள்ளமும் நிறைந்த ஒரு வீதியின் வழியாக அந்த லொறி சென்று கொண்டிருந்தது. கரடு முரடான அந்தப் பாதை லொறியை அப்படியும் இப்படியுமாக அலைமோதச் செய்தது. லொறி பலமாகக் குலுங்கியபோது, சிகிலுக்கு இருமல் வந்துவிட்டது. ஓயாமல் இருமினுர். அதன் விளைவாக ஒரு அதிசயம் நடந்தது!

சளியைக் கீளே துப்புவதுபோல துப்பாக்கி ரவையைக் கீழே துப்பினுர் சிகில்! ஆம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், மாஜி இராணுவ வீரர் சிகிலின் மூக்கைத் துளைத்துக்கொண்டு, தலைக்குள் சென்ற அந்தத் துப்பாக்கிக் குண்டுதான், இப்பொழுது வெளியில்வந்துவிழுந்தது.

### முள்வேலி முட்டுக் கட்டையா?

கிழக்கு ஜெர்மனித் துருப்புகளும், மேற்கு ஜெர்மனித் துருப்புகளும் காவல் புரியும் எல்லைக்கோடு!

அதன் அருகே—

ஒரு மாதத்திற்கு முன்பு, மேற்கு ஜெர்மனியைச்சேர்ந்த ஹெய்ன்ஸ்ஷீல் கெய்ன் என்ற இளைஞரும்; கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த செல்வி லைஸாவும் ஒருவரை ஒருவர் மனதாறக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்கள்! அன்று பிற்பகல், அவர்கள் மீண்டும் சந்திப்பதற்குள் இருதரப்புத் துருப்புகளும் எல்லைக் கோட்டிற்கு விரைந்துசென்று, பாதையை மறுத்துக் காவல் செய்யத் தொடங்கி விட்டன!

பெரிய பரிதாபம்! அன்றிலிருந்து இன்றுவரை அந்த இளம் காதலர்கள், எல்லைக்கோட்டினருகே நின்று, ஒருவரோடு ஒருவர் கண்ஜாடை பேசிக் காலத்தைக் கழித்து வருகிருர்கள். இருவருக்கும் ஊடே உள்ள இடைவெளி இருநூறு கெஜந்தான்; அப்படியிருந்தும் ஒருவரை ஒருவர் நெருங்க முடியவில்லை. இடையிலிருக்கும் முள்வேலி முட்டுக்கட்டையாக இருக்கிறது!

## ஐ. நா. காரியதரிசியின் மரணம் சதி வேலையா?

ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள கடங்கா துருப்புகளுக்கும் ஐ.நா.படைகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையை நேரில் கண்டு, நிலைமையை ஆராய்ந்து, கடங்காவின் அதிபர் திரு. சோம்பேயை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக அமெரிக்காவிலிருந்து திரு. ஹமர்ஷீல்ட் புறப்பட்டார். புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்சென்றவிமானம்தீப்பற்றி எரிந்து விழுந்தது' தூள் தூளாகச் சிதறிக் கிடந்த விமானத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பிணங்களில் ஐ. நா. சபைக்காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டினுடையதும் ஒன்று.

1905-ம் ஆண்டு ஜுலை மாதம் 29-ம் திகதியன்று சுவீடன் நாட்டில் திரு ஹமர்ஷீல்ட் பிறந்தார். சிறு வயதிலேயே பள்ளிப் படிப்பில் சிறந்து விளங்கிய இவர், பிற்காலத்தில் பொருளாதாரத் துறையில் நிபுணராகத் திகழ்ந்தார். காலப் போக்கில் அவரது சுய முயற்சியால் பல உயர்ந்த பதவிகளை வகித்து, சுவீடன் நாட்டின் வெளிவிவகார மந்திரியானுர். கடைசியில் 1953-ம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையின் காரியதரிசிப் பதவியையும் பெற்ருர்.

56 வயதான இவருக்கு இன்னும்திருமணமாகவில்லை. இவரது மரணம் ஒரு சதித்திட்டத்தின் விளைவாக இருக்கவும் கூடும் என்று உலக அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன!

## திரைமறைவில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ள ஆரம்பித்தார்களாம். அரசாங்கக் கட்சியிலுள்ள தங்களுடைய நண்பர்கள் எல்லாரையும் போய்ப் பார்க்க ஆரம்பித்தாராம் அந்தத் தமிழ்ப் பிரதிநிதி. முஸ்லிம் பிரதிநிதி வேருெரு தந்திரத்தைக் கையாண்டாராம். தன்னுடைய தொகுதி மக்களிடம் சென்று தனக்கு உதவி மந்திரி பதவி கொடுக்குமாறு கோரும் மகஜர்களைப் பிரதமருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டாராம் அவர். அவர்கள் இருவரும் கஷ்டம் பட்டதுதான் மிச்சம் போலும். மந்திரி சபை விஸ்த்ரிப்புப் பற்றிய பேச்சு இப்பொழுது எங்குமே கேட்பதில்லை.

### கேட்ட குரல்

''அவனும் மனுஷனு!''

''தலைவனெண்டால் எங்கட தனிப்பெரும் தலைவர் [தான்!"

''இவர்களெல்லாம் பதவிப்பித்துப் பிடிச்சவங்க''

''தமிழரசு என்ன செய்தது எண்டு கேட்கிறேன்''

''அவங்களிட்ட ஒரு திட்டமுமில்லை,''

''குமர்களை ஏமாற்றி வாத்தியார்வேலை எடுத்துத் தாறன் எண்டு இறயிலிலை கொண்டுபோய் விளையாடுபவனுக்கு என்ன அரசியல் எண்டு கேட்கிறேன்?''

''ஊரை ஏமாற்றப் போராட்டம் ஒன்று நடத்திஞன் [கள்''

''ரஷ்யாவிலை மழை பெய்ய இங்கு குடைபிடிப்பார் [கள்''

''யூகோசிலேவியாவை மறந்து கியூபா என்று கத் [தத் தொடங்கி விட்டான்கள்''

நல்லூர்க் கந்தசாமி கோவில் திருவிழாவின் போது ஒலிப்பதிவு கருவியை இரண்டு நிமிடம் திறந்து விட்டேன். அதில் பதிவான வசனங்களை மேலே தருகிறேன். நல்லூர்க் கந்தனைப் பற்றிய பேச்சே அதில் இல்லை. — அம்பலத் துறைவோன்

Registered as a newspaper at the G. P. O

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

யாழ்ப்பாணத்துக்கும்

## கசிப்பு வருகிறது!

'கசிப்பு' என்ற கள்ள மது அரக்கன் இப்போது யாழ்ப்பாணத்திலும் நடமாட ஆரம்பித்து விட்டான்! கசிப்பு வியாபாரத்தில், பிரபல சாராய வியாபாரிகள் சிலரும் ஈடுபட்டுள்ளனரென தெரிகிறது.

கசிப்பு ஏற்றுமதி, புகையிரத மார்க்கமாக நடைபெறுவதாகவும்; தென்னிலங்கையிலிருந்து நாள் தோறும் வட இலங்கைக்கு வருவதாகவும் புகையிரத இலாகாவுக்குச் சந்தேகம் உதித்திருக்கிறதாம். ஆனல், இதுவரை யாரும் அகப்படவில்லை!

யாழ்ப்பாணத்திலுள்ள இரகசிய சாராய வியாபாரிகளுக்கும், தென்னிலங்கைக் கசிப்பு வர்த்தகர்களுக்குமிடையில் இந்த இறக்குமதி சம்பந்தமாக நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும்; மொத்தமாக இறக்குமதிசெய்து,கிராமப்புறங்களிலுள்ள தம் ஏஜண்டுகள் மூலம் சில்லறை வியாபாரம் நடத்துவதாகவும் தெரிகிறது.

வடக்கில் கள்ள வடிசாராயத்தை, ஒரு கைதேர்ந்த குடிசைக் கைத்தொழிலாகக் கொண்டிருக்கும் ஒரு சில கிராமங்களில் 'கசிப்பு' தயாரிப்பதற்கான பயிற்சியும் நடைபெறுகிறதாம்!

## பிச்சைக் காரரின் தொழிற் சங்கம்!

கல்கத்தாவின் ஒரு பகுதியில் வாழும் பிச்சைக்காரர்கள், தங்களுக்குள் தொழிற்சங்கமொன்றை நிறுவியிருக்கிருர்கள்! பிச்சைக்காரர்களை வைத்துத் தனிப்பட்ட 'முதலாளிகள்' பணம் திரட்டுவதைக் கண்டித்தும்,தொழிற் பாதுகாப்பிற்காகத் தங்கள்பகுதியில்தொழிற் சங்கத்தில்சேராதவர்களைப் பிச்சையெடுக்க அனுமதிப்பதில்லையென்றும் அவர்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர்!

FOR Sparkling PHOTOGRAPHS !



Gnanams


PHOTOGRAPHERS. JAFFNA

கிங்ஸ்லி — பிளாஸா — வெலிங்டன் — விஜயா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் எட்டு நகரங்களில் உள்ள சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் படமாளிகைகளில்

வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.




இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலே தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'